## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி


03.07.2019 புனித தோமா இந்தியாவின் திருத்தூதர் - திருப்பலி 02
06.07.2019 புனித மரிய கொரற்றி - திருப்பலி 03
07.07.2019 பொதுக்காலம் 14ம் ஞாயிறு - திருப்பலி 04
07.07.2019 அருளாளர் மரிய ரொமேரோ மெனேஸஸ் - திருப்பலி 06
11.07.2019 புனித பெனடிக்ட் - திருப்பலி 07
13.07.2019 புனித ஹென்றி - திருப்பலி 08
14.07.2019 பொதுக்காலம் 15ம் ஞாயிறு - திருப்பலி 09
15.07.2019 புனித பொனவெந்தூர் - திருப்பலி 10
16.07.2019 கார்மேல் மலை புனித கன்னி மரியா - திருப்பலி 12
21.07.2019 பொதுக்காலம் 16ம் ஞாயிறு - திருப்பலி 13
22.07.2019 புனித மகதலா மரியா - திருப்பலி 14
25.07.2019 புனித யாக்கோபு திருத்தூதர் - திருப்பலி 15
26.07.2019 புனித யோவாக்கிம், அன்னாள் திருவிழா - திருப்பலி 16
28.07.2019 பொதுக்காலம் 17ம் ஞாயிறு - திருப்பலி 17
29.07.2019 புனித மார்த்தா - திருப்பலி 18
31.07.2019 புனித லொயோலா இஞ்ஞாசியார் - திருப்பலி 19


## பகுதி 2: விசுவாசத்தில் வளர...


1. புனித தோமா இந்தியாவின் திருத்தூதர் 20
2. மரியாளின் பெற்றோர் யோவாக்கிம் அன்னாள் 23
3. அருளாளர் மரிய ரொமேரோ மெனேஸஸ் - வாழ்வு தரும் பாடம் 25
4. திருச்சபைச் செய்திகள் 27

## பகுதி 1: வழிபாட்டு வழிக்காட்டி

## 03.07.2019 புனித தோமா - இந்தியாவின் திருத்தூதர் திருப்பலி

**முன்னுரை** திரு. விக்டர்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பன்னிரு திருத்தூதர்களில் ஒருவர் புனித தோமா ஆவார். துணிவுமிக்கவர், இயேசுவுக்காகத் தன்னையே இழக்கவும் துணிந்தவர். ஒருமுறை யூதேயாவில் உள்ள யூதர்கள் இயேசுவின்மீது கல்லெறிய முயன்றனர். ஆனால் இயேசுவின் உறவினராக இலாசர் மரித்த நிலையில் இயேசு அங்கு மறுபடியும் செல்ல நினைக்கையில் மற்ற சீடர்கள் அங்கு செல்ல வேண்டாம் என்று இயேசுவைத் தடுத்தனர். ஆனால் புனித தோமாவோ "அவரோடு செல்வோம், அவரோடு இறப்போம்" (யோவா 11: 16) என்று கூறி தனது துணிவை வெளிப்படுத்தினார்.

அந்தத் துணிவுதான் அவரை இந்தியாவில் நற்செய்தி அறிவிக்க அழைத்து வந்தது. இயேசு உயிர்த்த நிகழ்வை மற்ற சீடர்கள் தோமாவிடம் கூறியபொழுது அவர் நம்பவில்லை. என் கண்களால் காணதவரை நம்பமாட்டேன்" என்றார். இதனால் இயேசு தோமாவும் இருக்கின்றபொழுது மீண்டும் காட்சியளித்து "கண்ணால் காண்பதைவிட காணாமலே நம்புகிறவர்கள் பேறுபெற்றோர்" என்றார் (யோவா 20: 22). தோமாவோ தனது தவறை உணர்ந்தவராய் "நீரே என் ஆண்டவர், நீரே என் கடவுள்" என்றார் (யோவா 20: 28) புகழ்பெற்ற இந்த வார்த்தைகள் அவரது கல்லறையில் பொறிக்கப்பட்டுள்ளன.

கி.பி. 52ல் ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் வழியாக இந்தியா வந்த புனித தோமா அவர்கள் முதன் முதலில் கேரளத்தில் பணியாற்றினார். அவர்மூலம் திருமுழுக்குப் பெற்றவர்கள் "தோமா கிறிஸ்தவர்கள்" என்று இன்றும் அழைக்கப்படுகின்றனர். பின்பு கி.பி. 59ல் சென்னை மயிலைப் பகுதியில் நற்செய்தி அறிவித்த தோமாவை கி.பி. 72ம் ஆண்டு புனித தோமையார் மலை என்று சொல்லப்படுகின்ற மலையில் செபித்துக்கொண்டு இருந்தபோது ஈட்டியால் குத்தி கொலைச் செய்தனர்.

சைதாப்பேட்டை சின்னமலையில் அவர் தங்கியிருந்து பணிசெய்ததற்கான அடையாளங்கள் உண்டு. அவரது கல்லறை சென்னை மயிலையில் உள்ள புனித தோமையார் தேசிய திருத்தலத்தின்கீழ் உள்ளது. அழகிய அந்த சிற்றாலயத்தில் அமர்ந்து தியானம் செய்வது சிறந்த அனுபவமாகும். புனிதரின் திருவிழாவை ஜூலை3ம் நாள் சிறப்பிக்கின்றோம். புனித தோமா அவர்கள் இந்தியாவின் பாதுகாவலர் என்று அழைக்கப்படுகின்றார். இத்தகைய சிறப்புப் பெற்ற புனித தோமாவின் திருவிழாவைச் சிறப்பிக்கும் நாம் அவரது துணிவு, நம்பிக்கை, பாடுகளை ஏற்கும் மனப்பக்குவம் பெற்று நற்சாட்சியுள்ள கிறிஸ்தவ வாழ்வு வாழ வரம் வேண்டி இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.





**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல அன்பு இறைவா, நீர் இந்த உலகில் ஏற்படுத்தியிருக்கும் உமது திருஅவையை வழிநடத்தும் எமது திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், துறவிகள் யாவரும் "இயேசுவோடு செல்வோம், இயேசுவோடு மரிப்போம்" என்று முழங்கிய தோமாவைப்போல இயேசுவோடு உடனிருப்பவர்களாகவும் பணி வாழ்வில் உண்மையுள்ளவர்களாகவும் வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
2. வளம்தரும் வள்ளலே இறைவா, நாங்கள் வாழும் இவ்வுலகத்தில் உள்ள இயற்கை வளங்கள் அழியாமலும், நாட்டில் நிலவும் வறட்சி நீங்கி நல்ல மழையைத் தந்து மக்களின் துயர் துடைக்கவும், செழிப்பான விவசாயம் காணவும் வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
3. நம்பிக்கையின் துவக்கமும் முடிவுமானவரே, புனித தோமாவைப் போல இயேசுவின்மீது உண்மையான அன்புள்ளவர்களாகவும், வாருங்கள் அவரோடு இறப்போம் என்று முழங்கிய அவரைப்போல துணிவுமிக்கவர்களாகவும் நற்செய்திக்காகச் சான்று பகர்ந்து வாழ்ந்திட வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
4. எளியவர் எம்மை வழிநடத்தும் தந்தையே, இன்று இத்திருப்பலிக்கு வந்திருக்கும் ஒவ்வொருவரையும் ஆசீர்வதியும். இவர்களது இதய விருப்பங்களை நிறைவேற்றியருளும். இவர்களது எண்ணங்களை, ஏக்கங்களை, எதிர்ப்பார்ப்புகளை நிறைவேற்றி வளமையான, மகிழ்வான வாழ்வை இவர்களுக்கு வழங்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 06.07.2019 புனித மரிய கொரற்றி திருப்பலி

**முன்னுரை** திருமதி. டிலைலா சேவியர்

இறையேசுவில் அன்புள்ள இறைமக்களே, புனித மரிய கொரற்றி ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தவர். கல்வி கற்குமளவிற்கு இவரின் வீட்டில் வசதி இல்லாமல் இருந்தது. தனது 12வது வயதில் புதுநன்மை வாங்கும்போது கூட மற்றவர்களைவிட மிக எளிமையான உடையில் காணப்பட்டார். எனினும் இவரின் தாய் இவரை இறைப்பக்தியிலும், புனிதத்திலும் வளர்த்து வந்தார். புது நன்மை வாங்கிய சில வாரங்களுக்கும் பின் அலெக்சாண்ட்ரோ செரனெல்லா என்ற 18 வயது இளைஞன் தவறான வழியில் மரியாவை அடைய முயன்றான். தன்னுடைய இச்சைக்கு இணங்க மறுத்த இப்புனிதையை அவன் ஆத்திரத்தால் பலமுறைக் கத்தியால் கிழித்தான். "இது பாவம் இதனால் நீ நரகத்திற்குப் போவாய்" என்று எச்சரித்தும் எந்த பயனுமில்லாமல் குற்றுயிராய் விடப்பட்ட புனிதை மருத்துவமனையில் 24மணி நேரம் கழித்து உயிர் போகும் முன்பு "நான் அவரை மன்னித்து விட்டேன்" என்று சொல்லி உயிர் நீத்தார்.

அலெக்சாண்ட்ரோவுக்கு 30 ஆண்டுகள் சிறைத்தண்டனை அளிக்கப்பட்டது. பலகாலமாக மனம் திரும்பாத இவர் இறுதியில் மனம்மாறி மன்னிப்பு மன்றாடினான். "மரிய கொரற்றி விண்ணின்று மலர்களை என் கைகளில் கொடுத்ததாக கனவு கண்டேன்" என்று அறிவித்தான். சிறையிலிருந்து வெளி வந்தப்பின் மரியாவின் தாயிடம் சென்று மன்னிப்புக் கேட்டான். இந்த அலெக்சாண்ட்ரோ தம் இறுதி நாளில் கப்புச்சின் 3ம் சபைத் துறவியாக வாழ்ந்து கி.பி. 1970ல் மறைந்தார். 50 ஆண்டுகளுக்குப் பிறகு மரியாவுக்கு 12ம் பத்திநாதர் புனிதர் பட்டம் கொடுத்தார். இவரது பட்டமளிப்பு விழாவுக்கு உலகின் பல பகுதிகளிலிருந்தும் மக்கள் உரோமைக்கு வந்தனர். புனிதர் பட்டம் வழங்கும்போது மரியாவின் தாயும், 2சகோதரிகளும், ஒரு சகோதரனும் உடனிருந்தனர். இலட்சக்கணக்கான மக்கள் புனிதர் பட்டம் கொடுப்பதைப் பார்க்க மண்டியிட்டு இருந்த கூட்டத்திலே அலெக்சாண்ட்ரோவும் ஆனந்தக் கண்ணீர் சிந்தியது குறிப்பிடத்தக்கது. இவரின் மனமாற்றத்தைக் கண்ட நாமும் இப்புனிதையைப்போன்று தாராள உள்ளத்துடன் மன்னிக்கும் மனதை வேண்டி இத்திருப்பலியில் இறைஞ்சுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல அன்பு இறைவா, திருஅவையை வழிநடத்தும், திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள், துறவறத்தார் அனைவருக்கும் நல்ல ஆன்ம உடல் சுகம் தரவும், இவர்களின் எண்ணங்கள், எதிர்ப்பார்ப்புகள், தேவைகள் நிறைவேற்றப்படவும் வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. தூய்மையின் திருவுருவே இறைவா, தூய ஆவியாரின் ஆலயமாக விளங்கும் எங்கள் உடலையும், ஆன்மாவையும் என்றென்றும் எல்லா சூழ்நிலைகளிலும் புனிதமாக அவற்றை மதிக்கவும், காக்கவும் எங்களுக்குத் தேவையான அருட்கொடையை அளித்தருள உம்மை மன்றாடுகிறோம்.
3. இரக்கமே உருவான இறைவா, இப்புனிதையின் விழாவினைச் சிறப்பிக்கும் நாங்கள் இவரின் கற்புநெறி, மன்னிக்கும் மனப்பான்மையைப் பின்பற்றவும், எங்கள் குடும்பங்களிலிருந்து துறவற வாழ்விற்குச் சென்றிக்கும் அனைவரும் கற்பு நெறியில் வாழவும் வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 07.07.2019 பொதுக்காலம் 14ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திரு. சாண்டோ

I. எசா 66: 10-14 I. I. கலா 6: 14-18 மத் 10: 1-12,17-20

இறையேசுவில் அன்புள்ள இறைமக்களே, நம்தாய் திருஅவையானது பொதுக்காலம் 14ம் ஞாயிறு சிந்தனைகளை வாழ்வாக்கிட இன்று நமக்கு அழைப்பு விடுக்கின்றது. இன்றைய முதல் வாசகத்தில் இறைவனைத் தஞ்சமெனக் கொள்பவர்கள் எவ்வகையிலும் குறைவுபட மாட்டார்கள்.





அவரையே முழுமையாக நம்புபவர்களைத் தாய் தன் குழந்தையைத் தேற்றுவதுபோல் ஆண்டவர் காப்பார், உங்கள் இதயம் மகிழ்ச்சி கொள்ளும், ஆண்டவர் தம் ஆற்றலை நம்மேல் பொழிந்து காப்பார் என்றும், இரண்டாம் வாசகத்தில் இறைவனை நம்பும் அடியார்கள், மகிழ்ச்சியைக் காண்பது மட்டுமன்று, துன்பத்தையும் சந்திக்கத் துணிந்தவர்களாக இருக்க வேண்டும் என்றும் கூறப்படுகிறது. நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் சிலுவையை அன்றி வேறு எதைப்பற்றியும் பெருமைப் பாராட்டமாட்டேன். உலகைப் பொறுத்தவரையில் நான் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறேன், என் உடலில் உள்ள தழும்புகளே நான் இயேசுவுக்கு அடிமை என்பதற்கு அடையாளம். இன்பம் மட்டுமல்ல துன்பத்தைத் தாங்கி இறைப்பணியாற்ற வேண்டும் என்கிறார் புனித பவுல்.

நற்செய்தியில் நம் ஆண்டவர் இயேசு தம் திருத்தூதர்களை இருவர் இருவராக அழைத்து உலகமெங்கும் சென்று நற்செய்தியை அறிவிக்க அனுப்புகிறார். அவர்கள் திரும்பி வந்து நாங்கள் பேய்களை ஓட்டினோம், நோய்களைக் குணப்படுத்தினோம் என்று பெருமைப்படுகிறார்கள். இயேசு அவர்களைப் பார்த்து "இறைப்பணி புரியும்பொழுது நன்மைகள் மட்டும் நடக்காது, உங்களுக்குத் தீமைகள்கூட நேரிடும். உங்களை ஏற்றுக்கொள்ளாத மக்களைப் பார்த்து கலங்கி நிற்காமல் தொடர்ந்து இறைப்பணியை வெவ்வேறு ஊர்களுக்குச் சென்று தொடர வேண்டும். ஏனெனில் உங்கள் பெயர் விண்ணுலகில் எழுதப்பட்டுள்ளது. இதைக்குறித்தே நீங்கள் மகிழ்ச்சி அடையவேண்டும்" என்கிறார். திருமுழுக்கு பெற்ற நாம் ஒவ்வொருவரும் இறைப்பணிபுரிய அழைக்கப்பட்டுள்ளோம். இப்பணிபுரியும்போது பல இன்னல்களை, இடையூறுகளைச் சந்திக்க நேரிடும். எனவே நாமும் பவுலைப்போல "நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் சிலுவையயன்றி வேறு எதைப்பற்றியும் பெருமைப்பட மாட்டேன்" என்ற நம்பிக்கையை வளர்த்துக்கொள்ள அருள்வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், துறவறத்தார் இறையரசின் மேன்மையை உலகின் கடை எல்லையிலுள்ள மக்கள் அனைவரும் அறியும்படிச் செய்யவும், இறையரசின் பணிகளுக்குத் தங்களால் இயன்ற பங்களிப்பை நல்கிடவும், புதிய திட்டங்களாலும் செயல் வடிவங்களாலும் மக்களைப் பண்படுத்தத் தேவையான ஆன்ம, உடல் நலத்தையும் இறைப்பற்றையும் பெற்றிடவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. அன்பு இறைவா, எம் பங்கிலுள்ள சிறுகுழந்தைகள் அனைவரும் தவறாது ஆலய வழிபாடுகளில் பங்கெடுக்கவும், பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைச் சிறுவயது முதலே இறைப்பக்தியில் வளர்த்து, உம் இறைப்பணியை நாடெங்கும் சென்று அறிவிக்கக் கூடிய போதுமான

ஞானத்தையும், தைரியத்தையும் தந்து வழிநடத்திடவும் வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. மருத்துவருக்கெல்லாம் மருத்துவரான இறைவா, உலகில் பல்வேறு நோய்களால், துன்புறும் மக்களையும், மரணப்படுக்கையில் உள்ளவர்களையும் உமது விலாவிலிருந்து பெருக்கெடுத்த நீராலும் குருதியாலும் குணமாக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. அன்பு இறைவா, எம் பங்கிலுள்ள இளைஞர் இளம்பெண்கள் இறையருளால் தாங்கள் கற்கும் கல்வியில் திறமையானவர்களாகவும், பெற்றோருக்கும் சமுதாயத்திற்கும் தங்கள் பங்களிப்பை முழுமையாக நல்கிடவும், நன்றியுணர்வோடு இறைப்பணியில் தங்களால் இயன்றவரை செயலாற்றிடவும் தேவையான ஞானத்தையும் இறையாசீரையும் பெற்றிட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 07.07.2019 அருளாளர் மரிய ரொமேரோ மெனேஸஸ் திருப்பலி

**முன்னுரை** சலேசிய புனிதர்களின் திருப்பலி புத்தகம்

மரிய ரொமேரோ மெனேஸஸ் 1902ம் ஆண்டு சனவரி 13ம் நாள் மத்திய அமெரிக்காவில் நிக்கராகுவா நாட்டில் மெர்சேடஸ் நர்ட்பேசா, அன்னா மெனேஸஸ் என்னும் தம்பதியர்களுக்கு அன்புப் புதல்வியாகப் பிறந்தார். தமது 12ம் வயதில் சலேசிய கன்னியர்கள் நடத்திய பள்ளியில் சேர்ந்து கல்வி கற்றார். "மரியாளின் குழந்தைகள்" (Children of Mary) என்று அழைக்கப்பட்ட பக்த சபையில் உறுப்பினராகி இயேசுவை அரசராகவும், மரியன்னையை அரசியாகவும் தம் வாழ்வில் கொண்டார். 1919ம் ஆண்டு சான்சால்வதாரில் சலேசிய கன்னியர் சபையில் சேர்ந்தார். புறநகர்ப் பகுதியில் வறுமையில் வாடிய ஏழைகளுக்கும் வீதியில் வாழ்ந்த மக்களுக்கும் ஆசிரியையாகவும், திருத்தூதுவராகவும் விளங்கினார். ஆரட்டரிகளை உருவாக்கி சிறுவர் சிறுமியர் உணவு, உடை மற்றும் கல்வி பெற வசதி செய்தார்.

"சகாய அன்னையின் கோட்டை" என்ற பெயரில் வீட்டுவசதித் திட்டங்களை உபகாரிகளின் தாராள உதவியுடன் ஏழைகளுக்குச் செய்துக் கொடுத்தார். நம்பிக்கையில் உறுதியும், பணியில் தெளிவும், வாழ்வில் ஒளிவு மறைவற்ற தன்மையும் பெற்றிருந்தார். ஆசிரியராக, மறைக்கல்வி பயிற்றுவிப்பவராக, கலைஞராக, மருத்துவ தாதியாக, குழந்தைகளுக்கு நல்லதொரு தாயாக, ஏழைகளுக்குப் புகலிடமாக, அடைக்கலமாக விளங்கிய இவர் இயேசு மரியின் பக்தியை எல்லா இடங்களிலும் பரப்பி 1977ம் ஆண்டு ஜூலை 7ம் நாள் மாரடைப்பின் காரணமாக இயற்கை எய்தினார். திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் இவரை 2002ம் ஆண்டு ஏப்ரல் 14ம் நாள் அருளாளர் நிலைக்கு உயர்த்தினார். இவர் தான் மத்திய அமெரிக்காவிலே முதன் முதலில் அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்டவர். இவரின் வாழ்வைப் பின்பற்றி நாமும் இறைவனுக்கேற்ற பிள்ளைகளாக வாழ இத்திருப்பலியில் பக்தியோடு பங்கெடுப்போம்.





**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. முழு முதல் தலைவனே இறைவா, எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் அனைவரும் தங்களின் வாழ்வில் அருட்சகோதரி ரொமேரோ மெனேஸசைப்போல இறைப்பக்தியை எல்லா இடங்களிலும் பரப்பத் தேவையான அருளைத் தந்தருளுமாறு உம்மை மன்றாடுகிறோம்.
2. படைப்பின் தலைவனே எம் இறைவா, "பகிர்ந்து வாழாத தன்மை ஒரு கொலையே" என்ற அருளாளர் ரொமேரோ மெனேஸசின் வார்த்தைக்கேற்ப நாங்கள் அனைவரும் எங்களிடம் உள்ள வளங்கள், ஆற்றல், சக்தி, நேரம், திறமைகள் ஆகியவற்றைப் பிறரோடு பகிர்ந்து வாழத் தேவையான வரங்களைப் பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. இரக்கத்தின் ஊற்றே எம் இறைவா, அருளாளர் ரொமேரோ மெனேஸசைப்போல நாங்கள் ஒவ்வொருவரும் நம்பிக்கையில் உறுதியும், பணியில் தெளிவும், ஒளிவு மறைவற்ற தன்மையும் பெற்று எளிய மனத்தோராகிய ஏழை எளிய மக்களை அன்பு செய்து, அவர்களின் உடல் உள்ளத் தேவைகளில் உடனிருந்து, அவர்களின் சிரிப்பில் உம்மைக் காணும் அருளினைப் பெற்றிட உம்மை மன்றாடுகிறோம்.

## 11.07.2019 புனித பெனடிக்ட் திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிசம்பந்தன்

இறையேசுவில் பிரியமானவர்களே, இன்று நமது திருஅவை பெனடிக்ட் என்னும் புனிதரின் வாழ்வைச் சிந்திக்க நம்மை அழைக்கிறது. இவர் இத்தாலியிலுள்ள "நார்சியா" என்னும் இடத்தில் கி.பி. 480ல் நல்ல வசதிமிக்க குடும்பம் ஒன்றில் பிறந்தவர். ரோமன் கத்தோலிக்கப் பள்ளியில் உயர்கல்வி கற்றவர். துறவறம் மேற்கொண்டு சேவைசெய்து பின் 3வருடங்கள் குகை வாசம் செய்தார். அதற்கு பின் "மாண்ட் கேசியோ" என்னும் குரு மடத்தை உருவாக்கி அதன் தலைவராகப் பணிபுரிந்து மேலும் 12 குருமடங்களையும் ஒவ்வொன்றிலும் 12 குருக்களையும் உருவாக்கினார். இயேசுவின் சீடத்துவத்தில் மிகுந்த ஆர்வம் கொண்டு பல சீடர்களையும் உருவாக்கினார்.

புனித கிரகோரியார் தான் எழுதிய 2ம் புத்தகத்தில் புனித பெனடிக்டின் நான்கு சீடர்களைப் பற்றியும் எழுதியுள்ளார். புனித பெனடிக்ட் துறவிகளுக்கான விதிமுறைகள் அடங்கிய "பென்டிக்டின் ரூல்" என்ற கொள்கைகளை வகுத்தார். பெயருக்கேற்றாற்போல் இவர் பல ஆசீர்வாதங்களைப் பெற்றவர். இறை ஆராதனை பக்தியிலும் சமூகத்தின் நலன் குறித்தும் பல ஆராய்ச்சிகள் செய்தவர். இவர் கி.பி. 547ல் விண்ணகம் அடைந்தார். 1964ல் திருத்தந்தை ஆறாம் சின்னப்பர் "ஐரோப்பா" முழுமைக்கும் "பாதுகாவலர் தந்தையாக" இவரைப் பிரகடணம் செய்தார். பல குருமடங்கள் தோன்றக் காரணமாக இருந்த இவரின் தவ வாழ்வு நமக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக அமைய அருள்வேண்டி இத்திருப்பலியில் இணைவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. முடிவில்லா இறைவா, உம்வழி வரும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவரும் பிறருக்கு முன்மாதிரியாகவும் கிறிஸ்து இயேசுவின் மாட்சிமையைப் பிறருக்கு அறிவிக்கவும், உலகம் முழுவதும் கிறிஸ்துவின் திரு வசனங்கள் முழங்கவும் உழைக்க அருள்வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
2. நல்லொழுக்கத்தின் நாயகனே இறைவா, புனித பெனடிக்ட் தமது துறவற வாழ்வின் மூலம் மக்களுக்கு நல்ல முன்னோடியாகத் திகழ்ந்ததுபோல், இன்றைய சூழலில் வாழ்ந்துக் கொண்டிருக்கும் உம் துறவற பிள்ளைகளும் புனித பெனடிக்ட்போல வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
3. குணமளிக்கும் வள்ளலே இறைவா, மருத்துவமனைகளில் நோயினால் வாடி நலிந்துக் கொண்டிருக்கும் நோயாளிகளையும், ஆதரவின்றி தவிக்கும் இளம் சிறார்களையும், முதியோர் இல்லங்களில் தனிமையில் வாடுவோரையும் நீர் இரக்கம் கொண்டு பாதுகாக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 13.07.2019 புனித ஹென்றி திருப்பலி

**முன்னுரை** திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்

இறையேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே, இன்று திருஅவையானது புனித ஹென்றியின் திருவிழாவை சிறப்பித்துக் கொண்டிருக்கிறது. ஜெர்மனியில் உள்ள பவேரியாவில் 973, மே 6 அன்று பிறந்தார். பவேரியாவின் கோமகனாக இருந்த இவருடைய தந்தையின் பெயர் இரண்டாம் ஹென்றி. ஜிசெல்லா என்பது இவரது தாயாரின் பெயர். ரீகன்பெர்க் ஆயர் வோல்ஃப்காஸ் என்பவரின் பொறுப்பில் வளர்ந்த இந்த புனிதர் அவரது வழிகாட்டுதலில் கல்வி பயின்றார். குருத்துவ வாழ்வு வாழ விரும்பினார். திடீரென தந்தை இறந்ததால் தந்தையின் பதவிக்கு இவரை 995ல் தேர்ந்தெடுத்தார்கள். பவேரியா நகரின் கோமகனாக இருந்த ஹென்றி 1002ம் ஆண்டு ஜெர்மனியின் அரசரானார். குணகுந்தா என்ற பெண்மணியை தமது வாழ்க்கைத் துணையாக்கிய ஹென்றிக்கு குழந்தைகள் பிறக்காவிட்டாலும், மனமகிழ்வுடன் குடும்பம் நடத்தி சிறப்புடன் ஆட்சி செய்து வந்தார்.

திருத்தந்தை எட்டாம் ஆசீர்வாதப்பர் 1014 பிப்ரவரி 14 அன்று ஹென்றியை உரோமையின் பேரரசராக முடிசூட்டினார். தன் ஆட்சிகாலத்தில் கிறிஸ்தவ மதத்தைக் காக்க இத்தாலியில் கிரேக்கர்களுடனும், லொம்பார்டுகளுடனும் போராடினார். திருஅவைக்கும் அரசுக்கும் இடையே நல்லுறவை வளர்த்தார். மனைவியை இழந்த பிறகு சிலகாலம் தனிமையில் வாடினார். கடைசி காலங்களில் சிறிது ஊனமுற்ற





காலுடன் இறைவனின் அன்புப்பிள்ளையாக வாழ்ந்து 1024, ஜீலை 13 அன்று இறைவனைப்பற்றிக் கொண்டார். இவரைத் திருத்தந்தை 3ம் யூஜின் 1146ல் புனிதராக உயர்த்தினார். இந்தப்புனிதர் மாற்றுத்திறனாளிகளின் பாதுகாவலர் என்று அழைக்கப்படுகிறார்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. வாழ்வளிக்கும் வள்ளலே எம் இறைவா, திருஅவையை வழிநடத்தும் எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள், மற்றும் பொதுநிலையினர் அனைவரும் தங்களது பணிவாழ்வில் விவேகத்தோடு செயல்படவும், துணிவையும், அமைதியையும், அணிகலன்களாகக் கொண்டு செயல்படுமாறு உம்மை மன்றாடுகிறோம்.
2. உறவை வளர்க்கும் உன்னத இறைவா, எம் நாட்டையாளும் தலைவர்கள் தூய ஹென்றியைப்போல தங்களின் பணியின் மேன்மையை உணர்ந்தவர்களாய், ஏழை எளிய மக்களுக்குத் தங்களால் முடிந்தளவு அவர்களின் தேவைகளை நிறைவேற்றும் எண்ணத்தையும், மனநிலையையும் அவர்களுக்கு அளித்து ஏழைகளின் வாழ்வில் மகிழ்வினைக் கண்டிட தேவையான வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. துணை நிற்கும் தூய தந்தையே, மாற்றுத்திறனாளிகளின் பாதுகாவலரான தூய ஹென்றியின் திருநாளைக் கொண்டாடும் நாங்கள், எங்கள் அன்பியக்குடும்பங்கள் மற்றும் பங்குத்தளங்களில் இருக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கு அரசிடமிருந்து கிடைக்கக் கூடிய சலுகைகளை பெற்றுத்தரும் கருவிகளாக செயல்பட எங்களை ஆசீர்வதித்து நல்வழி நடத்திட வரம்வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

## 14.07.2019 பொதுக்காலம் 15ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. பத்மாவதி

I. இச 30: 10-14 II. கொலோ 1: 15-20 லூக் 10: 25-37

இறையேசுவில் நம்பிக்கையுள்ள இறைச்சமூகமே, இன்றைய வாசகங்களில் "உங்கள் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள்" என்று இறைவன் அழைப்பு விடுக்கிறார். இறைவனிடம் திரும்பி வரும்பொழுது ஏதாவது ஒரு செயலிலோ, ஏதாவது ஒரு நாளில் மட்டுமோ, அல்லது ஏதாவது ஒரு குணத்தில் மட்டுமோ, மனம்மாறி திரும்புவதை இறைவன் விரும்பவில்லை. நம் முழு உள்ளத்தோடும், முழு இதயத்தோடும், முழு வலிமையோடும் திரும்பி வருவதையே இறைவன் எதிர்ப்பார்க்கின்றார் என்று முதல் வாசகம் கூறுகிறது. இண்டாம் வாசகத்தில் நாம் மனம்மாறி ஏற்றுக்கொண்டு திரும்பிவரும் இறைவன் யாரெனில் படைப்பனைத்திலும் தலைப்பேறு, உலகில் உள்ள அனைத்தும் அவராலேயே படைக்கப்பட்டன. அனைத்தும் அவருக்காகவே படைக்கப் பட்டன. நம் திருஅவையாகிய உடலுக்கு தலையும், தொடக்கமும் அவரே என்று நம் ஆண்டவராகிய இயேசுவின் சிறப்பை புனித பவுல் எடுத்துக்கூறுகிறார்.

நற்செய்தியில் நம் ஆண்டவராகிய இறைவனில் திரும்பி வருபவர்கள் அவர் நமக்குத் தந்த கட்டளைகளைக் கடைப்பிடிப்பவர்களாகவும், அக்கட்டளைகளை வாழ்ந்துக் காட்டுபவர்களாகவும், இருத்தல் வேண்டும் என்றும் அதற்கு உதாரணம், காலம் காலமாக தங்களின் எதிரிகள் என்று எண்ணியிருந்த யூதருக்கு சமாரியர் உதவி செய்வதாக ஒரு நிகழ்வை இயேசு கூறுகிறார். கிறிஸ்து இயேசுவில் திருமுழுக்குப் பெற்ற நாம் ஒவ்வொருவரும் இறைவனின் கட்டளைகளைக் கடைப்பிடித்து எதிரியாக இருந்தாலும் உதவி தேவைப்படும் இடங்களில் உதவிக்கரம் நீட்டும் திறந்த மனதை வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல இறைவா, எங்களைப் பாதுகாத்து ஞானவழியில் நடத்திச்செல்லும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள் அனைவரும் எதிர்க்கொள்ளும் பிரச்சனைகள், போராட்டங்கள், அவதூறுகள், போன்ற எல்லா தீமைகளிலிருந்தும் அவர்களைக் காத்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. எல்லாம் வல்ல இறைவா, நாட்டின் புதிய தலைவர்களை உம்பாதம் சமர்ப்பிக்கிறோம். அவர்கள் சாதிமத பேதமின்றி ஏழை மக்களுக்கு உகந்த சட்டத்திட்டங்களை வகுத்து நல்லாட்சி புரிய உமது கிருபையால் அவர்களை வழிநடத்திடும்படி உம்மை மன்றாடுகிறோம்.
3. கருணையின் வடிவே இறைவா, வரண்டு காய்ந்துக் கிடக்கும் பயிர்களையும், நீர் நிலைகளையும், ஏரிக்குளங்களையும் உமது கருணையினால் கண்ணோக்கி நல்லதொரு மழையினைத் தந்து தண்ணீர் பஞ்சத்தை நீக்கி மரம், செடி, கொடிகளும் செழித்து வளர உம்மை மன்றாடுகிறோம்.
4. துயருறுவோர்க்கு ஆறுதலளிப்பவரே, இன்றைய காலக்கட்டத்தில் பலவிதமான பிரச்சனைகளால், துயருற்று துடிக்கும் உம் மக்களை கண்ணோக்கும். நல்லதொரு மகிழ்வான ஆறுதல் அளிக்கும் வாழ்வை அவர்களுக்கு அளித்தருள உம்மை மன்றாடுகிறோம்.

## 15.07.2019 புனித பொனெவெந்தூர் திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிசம்பந்தன்

இறையன்பில் வாழும் இனிய நெஞ்சங்களே, இன்றைய தினம் நாம் புனித பொனெவெந்தூர் என்னும் புனிதரை நினைவு கூறுவோம். ஜான் என்பது இவரது திருமுழுக்குப் பெயர். இளம் வயதில் இவர் நோய்வாய் பட்டபொழுது புனித பிரான்சிஸ் அசிசியார் இவரை புதுமையாக சுகப்படுத்தினார். தூய பொனெவெந்தூர் தனது 22ம் வயதில் பிரான்சிஸ்கன் சபையில் சேர்ந்து புனித தாமஸ் அக்குவினாசை நண்பராக பெற்று கல்வி பயின்றார். பின்னர் சபையின் தலைவராகி சபையில் அமைதியை ஏற்படுத்தினார். புனித அசிசியாரின் வாழ்க்கை





வரலாற்றை எழுதியபோது புனித தாமஸ் அக்குயினாஸ் "ஒரு புனிதர் மற்றொரு புனிதரின் வரலாற்றை எழுதிக் கொண்டிருக்கிறார்" என்று கூறி பெருமிதப்பட்டார். திருத்தந்தை இவரது திறமையை கண்டு இவரை கர்தினாலாக்க தீர்மானித்து அதற்குரிய தொப்பியை தனது பிரதிநிதிகள் மூலமாக புனித பொனெவெந்தூரிடம் அனுப்பினார். அவர்கள் அங்கு சென்றபோது சமையறையில் தட்டுகளை கழுவிக்கொண்டிருந்த புனித பொனெவெந்தூரரை கண்டு திகைத்து விட்டனர்.

புனிதர் அவர்களிடம் "தொப்பியை தயவு செய்து அந்த மரத்தில் தொங்க விட்டு செல்லுங்கள்" என்று கூறினார் நமது தாழ்ச்சி நிறைந்த புனிதர். (புத்தகம்: புனிதர்களின் வரலாறு) தன்னையே இழக்க துணிந்தவன் உண்மையான சீடன். வாழ்வில் துன்பங்கள் நேரும்போது தளரா மனதுடன் இறைவனைப்பற்றிக் கொண்டு எதையும் தாங்கும் இதயத்துடன் வாழவேண்டும் என்றும், சீடத்துவம் என்பது எதையும் முழு நிறைவுடன் செய்வதுதான் என்று கூறும் நமது புனிதரின் நினைவுடன் திருப்பலியில் இணைவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. நல்லாயனாம் இறைவா, உமது வழிதோன்றும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், இருபால் துறவியர், குருக்கள், பொதுநிலையினர் அனைவரையும் ஆசிர்வதித்தருளும். ஆவியின் கொடைகளை பெற்றுள்ள இவர்கள் வளரும் சமுதாயத்தினரை இறைவாக்கு பணியாளராக தொண்டாற்றும் உள்ளம் கொண்டவராக, கற்றுக்கொடுப்பவராக, ஊக்கமூட்டுபவராக, தலைமை பொறுப்பேற்று செயல்படும் தலைவராக உருவாக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. பாதுகாப்பளிக்கும் இறைவா, உலகெங்கிலும் உள்ள கத்தோலிக்கர்களுக்கு மற்ற மதவாதிகளால் எந்தவித தீங்கும் உயிர் ஆபத்தும் ஏற்படாவண்ணம் பாதுகாத்து, மதநல்லிணக்கமும், ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து அன்பை வளர்க்கவும், ஒற்றுமை உணர்வு அனைவர் மனதிலும் உருவாகவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. இரக்கத்தின் அரசே, இக்கால இளைய சமுதாயத்தினரை உம்கரம் ஒப்புவிக்கிறோம். வங்கிகளில் கடன்வாங்கி படித்தும் வேலைவாய்ப்பு கிடைக்காமல் சோர்ந்து, வாழ வழித்தெரியாமல் தவித்துக்கொண்டிருக்கும் இளம் சமுதாயம் மீட்புப்பெற்று வாழவும், அவர் தங்களின் துன்பங்களை துடைக்க வழிகாட்டவும் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

## 16.07.2019 கார்மேல் மலை புனித கன்னி மரியா திருப்பலி

**முன்னுரை** திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்

கார்மேல் மலை பாலஸ்தீன நாட்டில் உள்ளது. இம்மலையில் வாதி-என்-சிய்யா என்ற இடத்தில் துறவிகள் சேர்ந்து அன்னைக்கு சிற்றாலயம் ஒன்று எழுப்பி போற்றி வந்தார்கள். இந்த மலையில்தான் முன்பு எலியா இறைவாக்கினர், இறைவனின் வல்லமையைப் போலி இறைவாக்கினர்களுக்கு வெளிப்படுத்தினார். சிலுவைப்போர் நடைப்பெற்ற 11ம் நூற்றாண்டில் சில துறவிகள் எலியாவைப் பின்பற்றி வாழ விரும்பி இதே மலைக்குச் சென்றார்கள். இவர்கள் "கார்மேல் மலைத் தூய துறவிகள்" என்று அழைக்கப்படுகிறார்கள். கார்மேல் மலை புனித கன்னிமரியாவின் விழா 14ம் நூற்றாண்டு முதல் கொண்டாடப்படுகிறது.

கார்மேல் சபையின் தலைமைத் தந்தையாக இருந்த புனித சைமன் ஸ்டோக் என்பவருக்கு அன்னை மரியா 1251 ஜூலை 16 அன்று காட்சி கொடுத்தார்கள். அக்காட்சியில் சைமனிடம் உத்தரியம் ஒன்றைக் கொடுத்த அன்னை மரியா, "இது கார்மேல் துறவிகளுக்கு வழங்கப்படும் தனிச்சலுகை இதைப்பக்தியோடு அணிபவர்கள் இம்மையிலும் மறுமையிலும் எவ்வித துன்பத்திலும் நரக நெருப்பிலும் அல்லலுற மாட்டார்கள்" என்றார். அன்னை மரியா காட்சி கொடுத்த அந்த நாளே கார்மேல் மலை புனித கன்னிமரியாவின் விழாவுக்கான நாளாக குறிக்கப்படுகிறது. இந்த நாளில் நாமும் உத்தரியம் அணிந்து அன்னையின் வழி நடைபயில இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

### நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. எங்களைக் கரம்பிடித்து வழிநடத்தும் அன்புத் தந்தையே, எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர், நற்செய்திப்பணியாளர்கள் அனைவரும் தங்களின் அழைப்பின் மேன்மையை உணர்ந்து பிரமாணிக்கத்துடன் இறைப்பணி செய்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. எக்காலத்திற்கும் அரசரே எம் இறைவா, எங்கள் நாட்டுத்தலைவர்கள், மற்றும் ஆட்சியாளர்கள் மக்கள்மீது கருணையும், இரக்கமும், அன்பும் கொண்டு செயல்பட அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. மகிமையின் ஒளியே இறைவா, எம் நாட்டில் உள்ள இளைஞர்கள், மாணவர்கள் அனைவரும் தங்கள் வாழ்வின் எதிர்கால நலன்கருதி விடாமுயற்சியோடு உழைத்து மகிழ்வான வாழ்வு வாழ்ந்திட அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.





## 21.07.2019 பொதுக்காலம் 16ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. டிலைலா சேவியர்

I. தொநூ 18: 1-10 II. கொலோ 1: 24-28 லூக். 10: 38-42

இன்றைய முதல் வாசகத்தில் ஆபிரகாம் கடவுளின் வாக்கிற்கு அடிப்பணிந்து தம் சொந்த நாட்டையும், இயற்கை சூழல் நிறைந்த பகுதியையும் விட்டுவிட்டு மணல் நிறைந்த பாலை வனங்கள் மட்டுமே இருக்கின்ற இடத்தில் குடியேறினார் என்றும், இத்தகையப் பகுதியிலும் விருந்தோம்பல் புனிதமாகக் கருதப்பட்டது என்றும் வாசிக்கிறோம். தன்னை நாடி வந்த மூன்று மனிதர்களின் தேவையறிந்து அவர்களுக்கு உணவளிக்கிறார் என்றும் அதுவும் தன்னிடமுள்ள மீதமானதை கொடுக்காமல் சிறப்பானவற்றைப் படைக்கின்றார் என்றும், அதற்கு பரிசாக ஆண்டவர் அவருக்கு ஒரு மகனை, வழித்தோன்றலை வாக்களிக்கிறார் என்றும் முதல் வாசகம் நமக்குத் தெளிவுப்படுத்துகிறது.

இரண்டாம் வாசகத்தில் திருத்தூதர் பவுல், தான் மனம் திருந்திய பின் தன்னை திருத்தூதர்களில் கடையவன் என்று (பவுல்) தன் பெயரை மாற்றிக்கொள்வதோடு இன்றைய வாசகத்தில் "மறைந்திருக்கும் திட்டம்" என்ற சொல்லை திருத்தூதர் பவுல் கோடிட்டுக் காட்டுகிறார். "மரியா நல்ல பங்கைத் தேர்ந்தெடுத்தார்" என்று இயேசு கூறுவதன்மூலம் மார்த்தாவையும் அதே நல்ல பங்கைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுமாறு கூறுகிறார். மேலும் "பணிவிடை பெறுவதற்கல்ல, பணிவிடைப் புரியவே வந்தேன்" என்று மறைமுகமாக இயேசு கூறுவதும் நமக்கு தெளிவுப்படுத்தப்படுகிறது. எனவே இறைவார்த்தைக்கு முழுமையாக நம்மையே அர்ப்பணித்து வாழும் வரம் வேண்டி இத்திருப்பலியில் இணைவோம்.

### நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. அன்பே உருவான இறைவா, திருஅவையைத் தாங்கி நிற்கும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள் தாங்கள் தெரிந்துக்கொண்ட நல்ல பங்கில் இறுதிவரை நிலைத்திருத்து சாட்சிய வாழ்வு வாழ்ந்திட உமதருளை அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. ஒளியே உருவான இறைவா, எங்கள் மத்தியிலிருக்கும் இறை ஊழியர்களுக்கு எங்களால் முடிந்த உதவிகளைச் செய்து, அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய மதிப்பையும், அன்பையும் தந்து உதவிடும் நல்ல மனதினை எங்களுக்கு அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. நற்கருணை நாதரே இறைவா, உம்மை உட்கொள்ளும் நாங்கள் உம்மைப்போலவே பிறருக்கு முன்மாதிரியான வாழ்க்கை வாழவும் அன்பிலும், இரக்கத்திலும், தாழ்ச்சியிலும் பரிவுக்காட்டும் நல்ல உள்ளத்தைத் தரவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. வார்த்தையின் வழிநடத்தும் இறைவா, எம் பங்கு பிள்ளைகளை உம்பாதம் சமர்ப்பிக்கின்றோம். உலக பொருட்கள்மீது நாட்டம் கொள்ளாமல் உம் வார்த்தை ஒன்றே நிலையானது என்று அதன்மீது வாஞ்சைக்கொண்டு தேடும் மக்களாக வாழ அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

## 22.07.2019 புனித மகதலா மரியா திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணி வில்சன்

"என் உயிருக்கு உயிரான அன்பரைத் தேடினேன்"

மகதலா மரியா அன்பிற்கு அர்த்தம் தந்தவர், தேடலுக்கு வெளிச்சம் காட்டியவர். அன்புத்தீ பற்றியெரிந்து இதயத்தில் தொடர்ந்து சுரந்து வந்ததை நிரூபித்தவர். அவரது அன்பு எவ்வளவு உறுதியானது என்பதை அவரது செயல்களில் காணலாம்.

- கலிலேயாவைச் சேர்ந்த மரியா மக்தல் என்ற நாட்டைச் சார்ந்தவர்.
- துவக்க முதல் இறுதிவரை இறை இயேசுவின் சிலுவை அருகில் நின்றவர்.
- இறையேசுவின் அடக்கத்திற்குத் தேவையான உதவிகள் புரிந்தவர்.
- அவரது கல்லறை காலியாக உள்ளது என்பதை முதலில் சுட்டிக் காட்டியவர்.
- உயிர்த்த இயேசுவை முதன் முதலில் காணும் பாக்கியம் பெற்றவர்.

திருத்தந்தை புனித பெரிய கிரகோரியார் தனது விளக்கவுரையில் இவரைப் பற்றி "கல்லறை காலியாக இருப்பதைக் கண்டு விரைந்து சென்று திருத்தூதர்களுக்கு அறிவித்து அவர்களும் வந்து கல்லறையைப் பார்த்து சென்றுவிட்டனர். ஆனாலும் மகதலா மரியா மட்டும் அங்கேயே நின்று தேடுகிறார், அழுகிறார், பல்வேறு சிந்தனைகளைச் சிந்திக்கிறார். என்ன நடந்தது? இயேசுவின் உடலை யார் எடுத்து சென்றிருப்பார்? என திகைக்கிறார்" என்று எழுதுகிறார். நாமும் இறைவனிடம் அன்பு செலுத்துவதிலும், ஓடோடிச் சென்று உதவுவதிலும், நன்மையைத் தேடுவதிலும், ஓடோடிச் சென்று அறிவிப்பதிலும், இறுதிவரை நிலைத்து நிற்பதிலும், நிலைத்து நிற்போமாக. இறைத் துணை நாடி வல்லமையைத் தேடி மகதலா மரியாவின் வழியில் பயணிக்க இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, எம் திருஅவையின் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், அருட்பணியாளர்கள், இருபால் துறவறத்தார், நற்செய்தி அறிவிப்புப் பணியில் உள்ளோர் அனைவரும் புனித மகதலா மரியாவின் பற்றுறுதியைப் பற்றிக்கொண்டு திருஅவையின் இலட்சியமாம் உலகெங்கும் சென்று நற்செய்தியைப் பறைச்சாற்றுவதை நிறைவேற்ற உமது அருள்வரங்களைப் பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. தேடுவோர் கண்டடைவர் என்ற இறைவா, ஒவ்வொரு மனிதரும் இறை வல்லமையைத் தேடி வரவும், நன்மையை நாடிச் சென்று அதனைத் துரிதமாக அனைவருக்கும் அளிக்கவும் தேவையான ஞானத்தையும் வல்லமையையும் அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.





3. இறுதிவரை நிலைப்போர் மீட்பு பெறுவர் என்ற இறைவா, எங்கள் இந்திய தேசத்தில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றம் நாட்டையும், மக்களையும் காப்பாற்றும் அரசாகவும், மக்களின் நலன் காக்கும் பரந்த மனம் படைத்தவர்களாகவும் தங்களின் பணியை சிறப்பாகச் செயல்படுத்தத் தேவையான நல்ல மனதைத் தந்தருள உம்மை மன்றாடுகிறோம்.

## 25.07.2019 புனித யாக்கோபு திருத்தூதர் திருப்பலி

**முன்னுரை** திரு. செபாஸ்டின்

ஆண்டவரில் அன்பும் நம்பிக்கையும் கொண்ட சகோதர சகோதரிகளே, இன்று நாம் புனித யாக்கோபின் திருவிழாவினைச் சிறப்பிக்கின்றோம். இவர் செபதேயு, சலோமி இவர்களின் மகன் யோவானின் மூத்த சகோதரர். பெரிய யாக்கோபுவை சந்தியாகப்பர் என்று திருஅவை அழைக்கிறது. இயேசுவின் 12 திருத்தூதர்களில் அவருக்கு நெருக்கமாயிருந்தவர்கள் பேதுரு, யோவான், யாக்கோபு. திருவிவிலியத்தில் நான்கு இடங்களில் இவர்களின் நெருக்கத்தைக் காண முடிகிறது. இயேசுவுடன் கொண்ட நெருக்கத்தின் விளைவாக "இயேசுவை ஏற்காதவர்களை" மிகக் கடுமையாக நடத்த வேண்டும். வானத்திலிருந்து நெருப்பு விழுந்து அவர்களை அழிக்க விரும்பினார். இதனால் இயேசுவிடம் சிறப்புப் பெயர் பெற்றனர்.

இயேசுவின் உயிர்ப்பிற்குப் பிறகு யூதேயா, சமாரியா, இத்தாலி, இஸ்பானியா போன்ற இடங்களில் தீவிரமாக நற்செய்திப் பணியாற்றி பல்லாயிரக்கணக்கான மக்களைத் திருமறையில் சேர்த்தார். இவர் ஒரு திருமுகத்தையும் எழுதியுள்ளார். அக்கிபா மன்னனால் கழுத்து அறுக்கப்பட்டு (யூதேயாவில்) மார்ச் 25ம் நாள் கி.பி. 42ல் திருத்தூதர்களின் முதல் மறை சாட்சியானார். இவரது சீடர்கள் இறந்த உடலை துடுப்பில்லா படகில் ஏற்றி பயணித்த போது வானதூதர் வழிகாட்டுதலால் இஸ்பானிய நாட்டு கலேசியா என்ற பகுதியை அடைந்தனர். இவரது கல்லறை இஸ்பானியாவில் உள்ள கம்போஸ் தெல்லாவில் உள்ளது. இக்கல்லறையின்மீது திருத்தலம் அமைந்துள்ளது. ஐரோப்பாவின் புகழ்பெற்ற திருத்தலமாக இன்றும் விளங்குகின்றது. நாமும் புனித யாக்கோபுவைப்போல் இறைவனுக்கு நற்கனிதர இத்திருப்பலியில் பக்தியோடு மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்பு இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் அனைவரும் தூய யாக்கோபுவிடம் விளங்கிய நம்பிக்கையைத் தம் பணிவாழ்வின் சாட்சியமாக மாற்றிட உம்மை மன்றாடுகிறோம்.

2. எம் இந்திய நாட்டையாளும் தலைவர்களும், ஆட்சியாளர்களும் அனைத்து இன மக்களையும் மனித நேயத்துடன், மக்களின் தேவையறிந்து செயல்படும் பரந்த மனதைக் கொண்டவர்களாக பணிசெய்திட உம்மை மன்றாடுகிறோம்.
3. அன்பின் ஊற்றே இறைவா, இங்கு கூடியுள்ள அனைத்து குடும்பங்களும், தூய யாக்கோபுவிடம் விளங்கிய கிறிஸ்துவ அனுபவத்தை பெறவும், நற்செய்திப் பணியை ஆர்வமாய் செய்யவும் அருள்வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

## 26.07.2019 புனித யோவாக்கிம், அன்னா திருவிழா திருப்பலி

**முன்னுரை** திரு. ஜீசஸ் மகுட மன்னன்

மாண்புமிகு பெற்றோரே இளையோரே, இன்று நம் தாயாம் திருஅவை புனித யோவாக்கிம் அன்னா திருவிழாவைக் கொண்டாட அழைக்கிறது. இவர்கள் அன்னை மரியாவின் பெற்றோர்கள். தாவீதின் வழிவந்தவர்கள். இவர்கள் கலிலேயாவிலிருந்து எருசலேமில் குடிபெயர்ந்ததாக வரலாறு கூறுகிறது. வாழ்ந்த இடத்தில் இவர்கள் பெயரில் ஓர் ஆலயம் எழுப்பப்பட்டுள்ளது. குழந்தைப் பாக்கியம் இல்லாமலிருந்த இவர்களுக்கு இறைத்தூதர் ஒருவர் தோன்றி உங்களுக்குக் குழந்தைப் பிறக்கும் என உறுதியளித்தார். யோவாக்கிம் அன்னாவிடம் நடந்ததைக் கூற, அதே தேவதூதர் வாக்களித்தபடியே அழகுமிகு பெண்குழந்தைப் பிறக்க அதற்கு "மரியா" எனப் பெயரிட்டார்கள். நேர்ந்துக் கொண்டபடியே மூன்று வயதில் மரியாவை ஆலயத்தில் அர்ப்பணித்தார்கள்.

மரியா ஆலயத்தில் இறை பிரசன்னத்தில் வளர்ந்து கொண்டிருந்த போது, தந்தை இறந்து விடுகின்றார். அன்னாவும் சிறிது காலம் கழித்து இறைவனடி சேர்கிறார். ஏற்கெனவே இவர்கள் தமது செல்வத்தைக் கடவுளுக்கு ஒரு பாகமும், ஏழைகளுக்கு ஒரு பாகமும், தங்களின் வாழ்வாதாரத்திற்கு ஒரு பாகமும் பிரித்துக் கொடுத்தனர். புனிதர்களான யோவாக்கிம் அன்னாள் கடவுள் பக்தியிலும், பயத்திலும், இல்லற வாழ்க்கையிலும் பிரமாணிக்கமாக வாழ்ந்ததுபோல், நாமும் வாழ்வோம் என இறைவனுக்கு வாக்களித்து இத்திருப்பலியில் பக்தியுடன் பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. ஞானத்தின் ஊற்றே இறைவா, நம் தாயாம் கத்தோலிக்கத் திருஅவையின் தலைவர் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், கன்னியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் தாங்கள் வாழும் சான்று வாழ்க்கையை உமக்குகந்த முறையில் வாழ அவர்களுக்குத் தேவையான அனைத்து அருட்கொடைகளையும் வரங்களையும் அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. வாழ்வை வளமாக்கும் இறைவா, ஆதரவற்ற முதியோர் ஆதரவு பெறவும், வாழ்வை இழந்து தவிப்போருக்கு நல்வாழ்வு கிடைக்கவும், தங்களின் வாழ்வில் நம்பிக்கையையும், விசுவாசத்தையும் உறுதியாகப் பற்றிக்கொள்ளத் தேவையான வரம் பெறவும் வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. ஒளிமயமான வாழ்வே இறைவா, இளைஞர்கள் தங்களின் தீயவழியிலிருந்து விலகி, சமூகத்திற்கு ஏற்றப் பிள்ளைகளாக இறைபக்தியிலும், விசுவாசத்திலும் சிறந்து கடவுளின் வழி தவறா மந்தையாக வாழ அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.





## 28.07.2019 பொதுக்காலம் 17ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திரு. D.V.R. ராஜா

I. தொநூ 18: 20-32 II. கொலோ 2: 12-14 லூக் 11: 1-13

அன்பு இறைமக்களே, நாம் கடவுளோடு இணைந்து அவருடைய போதனைகளின்படி வாழ்ந்து மீட்பைப் பெறுவதா? கடவுளை விட்டகன்று இச்சைக்கு இலக்காகி பாவத்தில் மடிவதா? இன்றைய நற்செய்தி வாசகத்தில் செபிப்பது, இறை வேண்டல் செய்வது பற்றிக் காண்கின்றோம். சோதோம் கோமோரா நகரங்களில் பாவங்கள் அதிகரித்துள்ளதால், அவற்றை நான் அழித்தொழிப்பேன் என்று இறைவன் கூறுகையில் ஆபிரகாம் பொறுமையாக இறைவனிடம் மன்றாடுகிறார். ஆபிரகாமின் வேண்டுதலால் லோத்தின் குடும்பம் மட்டும் காப்பாற்றப்பட்டது.

செபம் என்பது இறைவனோடு பேசுவது அப்பா, தந்தை என்ற உறவு முறையில், உரிமையோடு நமது தேவைகளைக் கேட்டுப் பெறுவது செபத்தினால் நாம் எல்லாவற்றையும் இறைவனிடம் பெற முடியும் என்பதை அந்த சிறு உவமையின் வழியாக கூறி, "கேளுங்கள் தரப்படும், தட்டுங்கள் திறக்கப்படும், தேடுங்கள் கண்டடைவீர்" என்று செபத்தின் சக்தியை விளக்குகிறார். ஆகையால் நாம் செபத்தின் முக்கியத்தையும் வல்லமையையும் உணர்ந்து பிள்ளைகளுக்கும் உணர்த்த வேண்டும். ஏனென்றால் திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவரும் கிறிஸ்துவோடு இணைக்கப்பெற்று நம்மைப் பாவத்திலிருந்து மீட்டு நமக்கு எதிரானவற்றை அழித்துவிட்டார். அழியா வாழ்வைப் பெற்று இறைவனில் என்றென்றும் நிலைத்திருக்க பாவத்தை நீக்கி, செபத்தில் நிலைத்திருந்து எல்லா அருட்கொடைகளையும் ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்ள இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. **திருத்தந்தைக்காக:** அன்பு தந்தையே, எமது திருத்தந்தையின் உடல் உள்ள நலனைப் பாதுகாக்கவும், தம் மந்தைகளுக்கும், உடன் ஊழியர்களுக்கும் எதிராகச் செயல்படும் தீய சக்திகளிடமிருந்து பாதுகாத்து, வழிநடத்தவும் தேவையான அனைத்து வல்லமைகளையும் அவருக்குத் தந்து ஆசீர்வதிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. **பங்கு மக்களுக்காக:** அன்பு இறைவா, எமது பங்கு மக்கள் ஒவ்வொருவரையும் பாதுகாத்து அவர்களின் பிள்ளைகளுக்கு நல்ல

கல்வி, வேலை வாய்ப்பு, வாழ்க்கைத் துணையைத் தந்து, கிறிஸ்துவோடும், திருஅவையோடும் நல்லுறவில் அவர்கள் நிலைத்திருக்கவும் வளமான எதிர்காலம் அமையவும் அருள்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. **இளையோருக்காக:** இருபால் இளையோரும், தங்கள் செயல்பாடுகளில் தங்களுக்கும், குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் திருஅவைக்கும் நன்மை கிடைக்கக் கூடிய வகையில தம் திறமை, ஆற்றல், ஞானம் இவற்றை நல்வழியில் பயன்படுத்தவும், இவர்கள் எண்ணிய இலக்கை எளிதாய் அடையவும், இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. **ஆட்சியாளர்களுக்காக:** அன்பு இறைவா, எம் நாட்டில் மக்களால் ஆட்சிப் பொறுப்பேற்ற தலைவர்கள், தாங்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளோம் என்பதை மறவாமல், மக்களுக்கு நன்மையும், பாதுகாப்பும், நல்கி, இயற்கை வளங்களைச் சிதைக்காமல் நாம் அனுபவித்த இயற்கை வளங்களை அடுத்த தலைமுறையினரும் பெற வேண்டுமென்ற நல்ல உள்ளத்துடன் செயல்பட உம்மை மன்றாடுகிறோம்.

## 29.07.2019 புனித மார்த்தா — திருப்பலி

**முன்னுரை**

திருமதி. ராணி சம்பந்தன்

I. எசா 7: 10-14, 8:10 II. எபி. 10: 4-10 லூக் 1: 26-38

இறையேசுவில் இனிய சகோதர சகோதரிகளே, இன்றைய தினம் நமது திருஅவை புனித மார்த்தாவின் நினைவு நாளைச் சிறப்பிக்கின்றது. இவரின் சகோதரி மரியா, சகோதரன் லாசர். "பெத்தானியா"வில் வாழ்ந்த வசதிமிக்க குடும்பத்தவர் என்று வரலாறு கூறுகிறது. மேலும் இயேசு பெத்தானியாவிற்கு வரும்போது இவர்கள் இல்லத்திற்கு வந்து இவர்களைச் சந்தித்துச் செல்வார். இயேசுவின் 72 சீடர்களும் இவர்களின் இல்லம் வந்து உணவருந்தி செல்வார்கள் என்றும் ஒரு குறிப்பு கூறுகிறது.

ஒருமுறை இயேசு புனித மார்த்தாவின் இல்லத்திற்கு வந்தபோது மார்த்தா சிறிது கோபத்துடன் "எனக்கு உதவி செய்யாமல் மரியா மட்டும் போதனைகளைக் கேட்டுக்கொண்டிருப்பதேன்" என கேட்க இயேசு மறுமொழியாக "உலக காரியங்களைப் பற்றி கவலைப்படாதே, மரியா அவளுக்குரிய நல்ல பங்கைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்" என்று கூறினார். திருத்தந்தை 12ம்பத்திநாதர் இவருக்குப் புனிதர்பட்டம் கொடுப்பதற்கு முன்பாகவே இவரின் பேராலே சபைகள் தோன்றுவதற்கு அனுமதி கொடுத்தார். கத்தோலிக்கப் பாரம்பரியத்திலும், ஆங்கிலிக்கன், கீழைத் திருச்சபை, லூத்தரன் ஆகிய பாரம்பரியத்திலும் இவரது சபை ஏற்றுக் கொள்ளப்பட்டது. இத்திருப்பலியில் புனித மார்த்தாவின் நம்பிக்கையையும், விருந்தினரை உபசரிக்கும் பண்பினையும் நாம் பெற அருள்வேண்டி செபிப்போம்.





**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. திருஅவையின் சங்கமமே இறைவா, எம் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், திருநிலையினர் ஆகிய அனைவரும் தாங்கள் எடுத்துக் கொண்ட பணியில் உண்மையுடன், இறைவனிடம் தம்மை அர்ப்பணித்து, அவரின் திருவுளத்திற்குப் பணிந்து செயலாற்றிய புனித மார்த்தாவைப் போன்று பணிபுரிந்திட அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. உறவின் சங்கமமே இறைவா, எங்கள் குடும்ப வாழ்வில் உறவில் ஒருவரையொருவர் பிரியாது, விட்டுக்கொடுத்து அன்பு செய்து இறைபக்தியுடன் வாழவேண்டிய அருளை புனித மார்த்தா வழியாக வழங்கிட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. பாதுகாப்பின் சிகரமே இறைவா, எமது தேசத்தின் புதிய பொறுப்பாளர்கள் தங்கள் சுயநலன்களை விலக்கி, மக்களின் நலன்கருதி தேசத்தின் முன்னேற்றத்தை மனதில் இருத்தி தங்கள் கடமைகளை, பணிகளைச் சரிவர செயலாற்றும் பொறுப்பை வழங்கிட புனித மார்த்தா வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

## 31.07.2019 புனித லொயோலா இஞ்ஞாசியார் — திருப்பலி

**முன்னுரை**

திரு. ஆ. பிரான்சிஸ் அலாய்சியஸ்

ஸ்பெயின் நாட்டின் லொயோலா என்ற இடத்தில் 1491ல் இஞ்ஞாசியார் பிறந்தார். இவரது திருமுழுக்குப் பெயர் இனிகோ. தம் இளவயதில் மிகச்சிறந்த போர் வீரனாக மாறினார். 1521ல் ஸ்பெயின் நகரான பாம்பலோனாவை பிரான்ஸ் மன்னன் முற்றுகையிட்டபோது நடைபெற்ற போரில் இஞ்ஞாசியாரின் முழங்காலில் குண்டு பட்டு பலத்த காயமுற்றார். அச்சமயத்தில் மருத்துவமனையில் சிகிச்சைப்பெற்று வந்தார். ஏறக்குறைய ஓராண்டு காலம் எங்கும் நடமாட முடியாமல் ஓய்வில் இருந்தபோது பொழுதுபோக்கிற்காக சில புத்தகங்கள் படித்தார். அவற்றில் "இயேசுவின் வாழ்வு" மற்றும் "புனிதர்களின் வாழ்க்கை வரலாறு" ஆகிய இரு புத்தகங்கள் இவரது உள்ளத்தைத் தொட்டன. புனிதர்களான அசிசியாரும், தோமினிக்கும் இறைவனுக்காக எவ்வளவோ செய்திருக்க "நான் ஏன் செய்யக்கூடாது" என்று தன்னையே அடிக்கடி கேட்டுக்கொண்டு இயேசுவின் நல்ல படைவீரனாக மாற எண்ணினார்.

குணமடைந்த பின்பு, மான்ரேசா என்னும் இடத்தில் 10 மாதங்களாக தனிமையில் செபமும் தவமும் மேற்கொண்டார். தன்னுள் எழுந்த எண்ணங்களை "ஆன்மீக பயிற்சிகள்" என்ற ஏடாக எழுதி வைத்தார். அதில் அவர் ஒன்றை அதிகம் வலியுறுத்துகிறார். அனைத்தையும் "இறைவனின் அதிமிக மகிமைக்காகச் செய்யுங்கள்". இந்த புனிதர் "இயேசு சபை"யை ஆரம்பித்தார். 1556ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 31ம் நாள் இறைவனடி சேர்ந்தார். இவர் "தியானங்களின் பாதுகாவலர்" என்று அழைக்கப்படுகிறார். "கல்வி மற்றும் கல்வியாளர்களின்" பாதுகாவலர்"

என்றும் அழைக்கப்படுகிறார். இறைமகிமைக்காக உழைப்போம், மண்ணில் மனிதம் வளர இந்தப் புனிதர் வழியாக திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. ஆற்றலும் வல்லமையும் சக்தியும் தரும் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர்கள், பொதுநிலையினர் ஆகியோருக்கு ஆற்றலும் வல்லமையும் சக்தியும் கொடுத்து உம் விடுதலையின் செய்தியை உலகமெங்கும் அறிவித்திடும் அருள்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. மக்களை ஆர்வத்துடன் காப்பவரே, எம் நாட்டின் வளர்ச்சிக்காகப் பாடுபடும் அனைத்து தலைவர்களையும், ஆட்சியாளர்களையும் ஆசீர்வதித்து, ஒவ்வொருவரின் உழைப்புக்கேற்ற நற்பயனைக் கொடுத்து, எம் நாட்டை முன்னேற்றப்பாதையில் நடத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. உமது வார்த்தையை அனுப்பி குணமளிக்கும் இறைவா, மருத்துவமனைகளிலும், இல்லங்களிலும் நோய்வாய்ப்பட்டிருக்கும் எம் மக்களுக்கு நீரே உமது வார்த்தையை அனுப்பி குணப்படுத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

# பகுதி - 2: விசுவாசத்தில் வளர...

## புனித தோமா இந்தியாவின் திருத்தூதர்

திரு. புல்லோன் ஜோ லூயிஸ்

வாழ்க்கையெனும் வரம்பெற்ற ஒவ்வொருவருமே வரலாற்றில் ஏதோ ஒருவகையில் இடம் பிடிக்கின்றனர், பெயர் பெறுகின்றனர். இங்கேயும் ஓர் அவி விசுவாசி, சந்தேகப் பேர்வழி. இது அவருக்கு இடப்பட்ட மாற்றுப்பெயர். அவரின் இன்னொரு பெயர் "திதிமுஸ்". அன்று உயிர்த்த இயேசுவைக் காண்பதற்கு அவர்போட்ட நிபந்தனையே, அவரைச் சந்தேகப் பேர்வழியாக்கியது. ஆனால் "நீரே என் ஆண்டவர், நீரே என் கடவுள்" என்று அந்த சந்தேகப் பேர்வழியே விசுவாச அறிக்கையாய் வெளியிட்டார். எனவே அவரை ஒரு சந்தேகப் பேர்வழி என்று சொல்வது முரண்பாடானது. அவர் மட்டுமா சந்தேகப்பட்டார். உயிர்த்த இயேசுவைக் கண்ட மகதலா மரியா சீடர்கள் இருவருக்கு, இயேசு தோன்றியதைக் கூறியபோது மற்ற சீடர்கள் நம்பவில்லை (மாற்கு 16: 12-13).

பந்தியில் அமர்ந்திருந்த பன்னிரு சீடர்களுக்கு இயேசு தமது உயிர்ப்பைப்பற்றி சொன்னபோது, நம்பாத அவர்களின் நம்பிக்கையைக் கண்டித்தார் (மாற்கு 16:14). கலிலேயா மலைக்கு அழைத்த இயேசுவைச் சீடர்கள் கண்டும், அவர்களுள் சிலர் நம்பவில்லை (மத் 28:16-17). விசுவாசத்தின் தந்தை எனப்படும் ஆபிரகாம், சாராயுடன் பஞ்ச காலத்தில் வருந்தியபோது, இறைவன் தம்மைக் காப்பார் என்ற விசுவாசம் அற்றவராய்





எகிப்து சென்றார். விசுவாசம் அற்றவர்களாய் இத்தனைப்பேர் இருக்க, விதிவிலக்காய், இவருக்கு மட்டுமே அந்தப் பெயர்.

வித்தியாசமான இவரே நம்மையெல்லாம் "காணாமல் நம்புவோர் பேறுபெற்றோர்" என இயேசுவின் வழியாய் விசுவாசத்தில் உயர்த்துகிறார். இறையியல் வல்லுநர் புனித அகுஸ்தீன் "மற்ற திருத்தூதர்களுடைய விசுவாசத்தைவிட, தோமாவின் விசுவாசத்தால்தான் நமது நம்பிக்கை பலம் பெறுகிறது" எனக் கூறுகிறார். அந்த விசுவாச அறிக்கையின் நாயகனே புனித தோமையார். தோமையார் என்ற பெயரோடு இவருக்கு திதிமுஸ் என்ற இன்னொரு பெயரும் உண்டு.

திதிமுஸ் என்றால் இரட்டையர் என்று பொருள்படும். இவரும் இவரது தங்கையும் இரட்டையர்கள். பெயரைப்போன்று இவரது தொழிலும் இரண்டு. தச்சுத்தொழில், மீன்பிடி தொழில். இவரது உள்ளத்து நிலையிலும் இரட்டை நிலையே. "இயேசுவைக் கண்டாலொழிய" என்று சொன்னவர், இயேசுவைக் கண்டபோது "என் ஆண்டவரே, என் கடவுளே" எனக்கூறி அவரின் உள்ளத்து இரட்டை நிலையை எடுத்துக்காட்டுகிறார்.

இறந்துபோன இலாசரைக் காண தனது உயிருக்கு ஆபத்து என்று தெரிந்தும் இயேசு சென்றபோது "நாமும் அவரோடு செல்வோம், அவரோடு இறப்போம்" என்றவர் இயேசு பிடிப்பட்டபோது துணிவற்றவராய் ஓடிவிட்டார். இதுவும் அவரது இரட்டை நிலையைக் காட்டுகிறது. அவரது வாழ்வின் இறுதியிலும் அவரின் வாழ்விடமும், இரண்டு. சின்னமலை, பெரியமலை. அவரின் இறுதி முடிவாம் மரணமும் இவ்விரண்டு மலைகளிலேயே நிகழ்கின்றன. பிறப்பிலிருந்து அவரின் இறப்பு வரை இந்த இரட்டை நிலைத் தொடர்ந்தது.

தாங்கள் பணி செய்வதற்காக, சீடர்களுக்கு வித்தியாசமான பணிகள் ஒதுக்கப்பட்டன. தோமையாருக்கு "பார்த்தியா" ஒதுக்கப்பட்டது. அக்காலத்தில் பார்த்தியா ஒரு சுயஉரிமை பெற்ற நாடாக இன்டஸ் முதல், டைகரிஸ் நதிவரையிலும் பெர்சியன் வளைகுடா முதல் காஸ்பியன் கடல்வரையிலும் பரந்திருந்தது. பார்த்தியர்கள் பிடிவாதமான, எவருக்கும் வணங்காத சந்ததியாய் இருந்தார்கள். அவர்களிடம் உரோமையர்கள் மதிப்பு வைத்திருந்தார்கள்.

அவர்களுக்குப் பயந்திருந்தார்கள். அப்படிப்பட்ட மக்களிடம் தோமா சென்று நற்செய்தியை அறிவித்தார் என்றால், அவரின் மனஉறுதி எத்தகையதாய் இருந்திருக்கும். இரத்த சாட்சியாக மரித்த தோமாவுக்காக மெசோபிதோமியாவிலுள்ள "எடெசா" என்ற இடத்தில் மிகச் சிறப்பான நினைவு ஆலயம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. இவர் நற்செய்தியை பார்த்தியர்களுக்கு அறிவித்ததைத் தொடர்ந்து மேதியர், பெர்சியர், கார்மேனியர், இக்கோனியர், பார்த்தியர், மேசியர் என பலருக்குமாய்

நற்செய்தியை அறிவித்தார். இறுதியாக இந்தியா வந்தார். புனித தோமா இந்தியாவில் 17 ஆண்டுகள் இறைத்தொண்டு செய்ததாக கூறப்படுகிறது. 4ஆண்டுகள் வட இந்தியாவில் சிந்து மாகாணத்திலும், 6ஆண்டுகள் மலபார் (கேரளாவிலும்) 7 ஆண்டுகள் சென்னை மயிலாப்பூரிலும் பணியாற்றியதாகக் கூறப்படுகிறது.

தோமையார் மலபாருக்கு வந்தபோது இராங்கனூருக்கு அருகில் இருந்த லாகூன் தீவில் "மலங்கரா" என்ற இடத்தில் இறங்கினார். அங்கே நற்செய்தியை அறிவித்ததோடு பலரை மனந்திருப்பி திருமுழுக்குக் கொடுத்தார். ஏழுபேர் சீடர்களாக அபிஷேகம் பெற்றதோடு இரண்டு ஆலயங்கள் கட்டினார், பின்னர் தோமா அங்கிருந்து மயிலாப்பூருக்கு வந்தார். மயிலாப்பூர் அரசனும், மக்களும் தோமாவின் நற்செய்தி அறிவிப்பைக் கேட்டு, கிறிஸ்தவர்களானார்கள். அங்கிருந்து சீனா சென்று மீண்டுமாய் மயிலாப்பூர் வந்தார். அந்தணர்கள் பலர் கிறிஸ்தவர்களானதைக் கண்ட அங்கு வாழ்ந்த தீவிரவாத அந்தனர்கள் பலர் தோமாவின்மீது பொறாமையும் கடுஞ்சினமும் கொண்டனர்.

அவர் சின்னமலையில் வழக்கமாய் செபிக்கும் குகையில் செபித்துக்கொண்டிருந்தபோது அவரைப் பிடித்து தாக்க ஆரம்பித்தார்கள். அவர் அவர்களிடமிருந்து தப்பி, பெரிய மலைக்குச் சென்று தம்மால் செய்யப்பட்ட பெரிய கற்சிலுவையைக் கட்டி அணைத்தவாறே செபித்துக் கொண்டிருந்தபோது, அர்ச்சகர் ஒருவன் ஈட்டியால் அவரது விலாவைக் குத்தினான். அந்த மரண வேளையிலும், தோமா அந்த சிலுவையைக் கட்டி முத்தமிட்டவராய் அவரின் இறைப்பணியை முடித்து இறந்தார், அன்று கி.பி. 72 ஜூலை 3ம் நாள். அவரின் உடல் அரசனின் அனுமதிபெற்று அவரால் திருநிலைப்படுத்தப்பட்ட ஆயர் பவுலோசால் மயிலாப்பூர் கடற்கரையில் அடக்கம் செய்யப்பட்டது.

வேத விரோதிகளுக்கு அஞ்சி, அவரது உடல் எடேசாவிற்கு கொண்டு செல்லப்பட்டது. இவர் இந்தியப் புனிதர் தோமா எனப்பட்டார். யூதாஸ் போன்றோரால், தலைகுனிந்த சீடத்துவம், தோமா போன்றோரால் தலை நிமிர்ந்தது. அதனால்தான் அவிவிசுவாசியான தோமா நமக்கு அளித்த விசுவாச அறிக்கையை உணர்ந்தவர்களாய், உலகெங்கும் உண்மையின் அமைதிப் பாதையில் மனித நேயம் கொண்ட மனித மலர்களாய் பூத்துக் குலுங்குவோம், மணம் வீசுவோம்.





## மரியாளின் பெற்றோர் யோவாக்கிம் - அன்னாள்

திரு. டே. ஆக்னல் ஜோஸ்

கத்தோலிக்கத் திருஅவை ஜூலை 26ல் கன்னி மரியாவின் பெற்றோரான புனித யோவாக்கிம் - புனித அன்னா ஆகியோரின் விழாவைச் சிறப்பிக்கின்றது. கி.பி. 2ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட "யாக்கோபின் முதல் நற்செய்தி" 3ஆம் நூற்றாண்டில் உருவான "மரியாவின் பிறப்பு நற்செய்தி" ஆகிய நூல்களில் இருந்து, மரியன்னையின் பெற்றோரது பெயர்களையும் அவர்களைப் பற்றிய சில குறிப்புகளையும் அறிந்துகொள்கிறோம். யூதக் குலத்தைச் சேர்ந்த யோவாக்கிம் நாசரேத்தில் பிறந்தவர் என்றும், ஆரோனின் குலத்தைச் சேர்ந்த அன்னா பெத்லகேமில் பிறந்தவர் என்றும் நம்பப்படுகிறது. இருவரும் யூத சமயத்தில் மிகுந்த பற்றுள்ள பெற்றோருக்குப் பிறந்ததால், பக்தியிலும் ஒழுக்கத்திலும் சிறந்து வளர்ந்தார்கள். செல்வந்தர்களாக விளங்கிய யோவாக்கிம் குடும்பத்தினர் பிற்காலத்தில் எருசலேம் நகரின் பெத்சதா குளத்தருகில் குடியேறினர். கடவுளின் திட்டப்படி, யோவாக்கிமும் அன்னாவும் இளம் வயதில் திருமணம் செய்து கொண்டனர்.

யோவாக்கிம் பல்வேறு தொழில்கள் மூலம் அதிக வருவாய் ஈட்டினார். அன்னாவும் யோவாக்கிமின் செயல்பாடுகள் அனைத்திலும் உறுதுணையாக இருந்தார். கிடைத்த வருவாய் அனைத்திலும் பத்தில் இரண்டு பங்கை இருவரும் கடவுளுக்குக் காணிக்கையாகச் செலுத்தி வந்தனர். இருபது ஆண்டுகளாக குழந்தை இல்லாத குறையையும் மறந்தவர்களாய், அவர்கள் வாழ்க்கை மகிழ்ச்சியுடன் கழிந்தது.

குழந்தைப்பேறு இல்லாத குறையை யோவாக்கிமும் அன்னாவும் பொருட்படுத்தாமல் வாழ்ந்தாலும், சிலர் அதைக் குத்திக்காட்டி அவர்களை வேதனைப்படுத்தினர். ஒருமுறை பலி செலுத்துவதற்காக எருசலேம் கோவிலுக்குச் சென்றிருந்த யோவாக்கிமிடம், "குழந்தைப்பேறு இல்லாத உனக்கு ஆண்டவருக்குப் பலிச் செலுத்தும் தகுதியில்லை" என்று ரூபன் என்பவன் கிண்டல் செய்தான். இதனால் மனமுடைந்த யோவாக்கிம், தமக்கு குழந்தை வரம் வேண்டி பாலைநிலத்திற்குச் சென்று கடவுளிடம் மன்றாடி வந்தார்.

அன்னாவும் வீட்டில் இருந்தபடியே, தனக்கு குழந்தைப்பேறு கிடைத்தால் அதை கடவுளுக்கு அர்ப்பணிப்பதாக நேர்ந்துக் கொண்டார். ஒருநாள் அன்னா செபித்துக் கொண்டிருந்த வேளையில் அவர்முன் தோன்றிய வானதூதர் ஒருவர், "உமது மன்றாட்டு கேட்கப்பட்டது. நீர் ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுப்பீர், அதற்கு "மரியா" என்று பெயரிடுவீர், அக்குழந்தை கடவுளின் அருள் பெற்றதாக இருக்கும்" என்று கூறினார். இந்த செய்தியை யோவாக்கிமுக்கு அன்னா சொல்லியனுப்ப, அவர் வீடு திரும்பி அன்னாவோடு கூடி வாழ்ந்தார்.

அன்னாவின் வயிற்றில் அமல உற்பவியாக மரியா கருவானார். பத்தாம் மாதத்தில் அன்னா குழந்தையைப் பெற்றெடுத்ததும், யோவாக்கிமுக்கு எல்லையில்லா மகிழ்ச்சி. அவர்கள் வாழ்ந்த பகுதியே விழாக்கோலம் பூண்டது. வானதூதர் அறிவித்தபடியே குழந்தைக்கு "மரியா" என்று பெயர் சூட்டினர். மரியாவை மூன்று வயது வரை வீட்டில் வளர்த்து வந்த யோவாக்கிம் - அன்னா தம்பதியர், பின்பு கடவுளுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றத் தயாராயினர்.

மரியாவுக்கு மூன்று வயது நிறைவுற்றதும், அவளை எருசலேம் கோவிலுக்கு அழைத்துச் சென்று கடவுளுக்கு அர்ப்பணித்தார்கள். மரியா கோவிலின் கல்விக் கூடத்தில் தங்கி, எபிரேய எழுத்துக்களை வாசிக்கவும் எழுதவும் கற்றுக்கொண்டாள். சிறிது காலத்தில், மரியாவின் தந்தை யோவாக்கிம் இறையடி சேர்ந்தார். அன்னா அதன் பிறகும் மனம் தளராது பக்தியோடு வாழ்ந்து வந்தார். குறிப்பிட்ட இடைவெளிகளில் கோவிலுக்குச் சென்று, மரியாவைச் சந்தித்து உரையாடிவிட்டு வீடு திரும்புவதை வழக்கமாகக் கொண்டிருந்தார் அன்னா.

மரியா பக்தியிலும் ஞானத்திலும் வளர்வதைக் கண்டு அன்னா மிகவும் பூரிப்படைந்தார். மறைநூலை வாசித்து சிந்திக்கவும், கோவிலுக்குத் தேவையான திரைச்சீலை உள்ளிட்ட புனிதத் துணிகளை நெய்யவும் மரியா பயிற்சி பெற்று வந்தாள். இத்தகையப் பயிற்சிகள், மீட்பர் இயேசுவின் தாயாவதற்கு அவளைத் தயார் செய்தன. அன்னாவும் மரியாவின் வளர்ச்சியில் அக்கறைக் கொண்டவராய் அவளுக்கு ஊக்கமளித்து வந்தார்.

மரியாவுக்கு 12 வயது நிறைவடைந்ததும் அவர் வீட்டுக்கு அனுப்பப்பட்டார். அதன்பின் ஏறக்குறைய ஓராண்டு காலம், அன்னாவின் பராமரிப்பில் மரியா வாழ்ந்து வந்தார். பிறகு முதுமையின் காரணமாக நோயுற்ற அன்னா, தாம் இனி பிழைப்பது கடினம் என்பதை உணர்ந்தார். அவ்வேளையில் அவர்முன் தோன்றிய வானதூதர், "மரியா உலக மீட்பரின் தாயாகப் போகிறாள். அவள் தாவீதுகுல இளைஞர் ஒருவரின் மனைவியாக வேண்டுமென்பது கடவுளின் விருப்பம்" என்று கூறிவிட்டு மறைந்தார்.

மரண நேரம் நெருங்குவதை உணர்ந்த அன்னா, தமது உறவினர்களான செக்கரியா - எலிசபெத்து தம்பதியரின் பராமரிப்பில் மரியாவை ஒப்படைத்தார். மரியாவுக்கு தாவீதுகுல இளைஞர் ஒருவரைத் திருமணம் செய்து வைக்கவும் அவர்களிடம் அன்னா வாக்குறுதி பெற்றுக் கொண்டார். கடவுள் தமக்கு வழங்கிய வாழ்வை அவருக்கு உகந்த விதத்தில் நிறைவு செய்த மகிழ்ச்சியோடு அன்னா கண்களை மூடினார்.

புனிதர்களான யோவாக்கிம் - அன்னா தம்பதியரின் வாழ்வில் இருந்து நாம் மூன்று பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும். முதலாவது,





கடவுள் தந்துள்ளவற்றைக் கொண்டு நிறைவாக மகிழ்ந்திருக்க நாம் பழக வேண்டும். இரண்டாவது, கடவுள் நமது வேண்டுதலுக்குச் செவிசாய்ப்பார் என்ற மனவுறுதியுடன் செபிக்க வேண்டும். மூன்றாவது, கடவுளுக்கு அளித்த வாக்குறுதியை முழுமனதுடன் நிறைவேற்ற வேண்டும். இத்தகைய வரத்தைப் பெறுவதற்கு புனித யோவாக்கிமும் புனித அன்னாவும் நமக்கு உதவி செய்வார்களாக ஆமென்.

## அருளாளர் மரிய ரொமேரோ மெனேஸஸ் - வாழ்வு தரும் பாடம்

திருமதி. டிலைலா சேவியர்

இப்புனிதை 1902 ஜனவரி 12ம் நாளில் கிரேனடா நிக்காராகிபை என்னும் ஊரில் உயர்குடியில் எட்டு குழந்தைகளில் ஒருவராகப் பிறந்தவர். இவருக்குச் சிறு வயதிலிருந்தே பெற்றோர்கள், உறவினர்கள் வழியாக முறையான கல்வி வழங்கப்பட்டது. இவரிடமிருந்த கலை ஆர்வத், திறமையை உணர்ந்த பெற்றோர்கள் வர்ணம் தீட்டுதல், வரைதல், பியானோ, வைலின் போன்ற இசைக்கருவிகளை மீட்டுதல் போன்ற பயிற்சிகளைத் திறமை வாய்ந்த ஆசிரியர்களைக் கொண்டு பயிற்றுவித்தனர். மேலும் இவருடைய பெயர் சலேசிய கன்னியர்களின் கல்வி நிலையத்திலும் பதிவு செய்யப்பட்டிருந்தது. 1924ம் ஆண்டில் தனது 12வயதில் தனக்கு ஏற்பட்டிருந்த மிகவும் மோசமான வாதக்காய்ச்சலும் பக்கவாதமும் சகாய அன்னையினால் தான் குணமடைந்தது என்பதை உணர்ந்தார். இந்நிகழ்ச்சியே இவர் ஓர் சலேசிய கன்னியர் ஆவதற்கு அடித்தளமாக அமைந்தது.

வாதக்காய்ச்சலினாலும், பக்கவாதத்தாலும் மரியா ஆறு மாதக்காலமாக பள்ளிக்குச் செல்லும் வாய்ப்பை இழந்திருந்தார். இருப்பினும் உடல்நிலை சரியில்லாமல் துன்பப்பட்டுக் கொண்டிருந்த காலங்களில் தன்னைத்தானே ஆழ்ந்த விசுவாசம், நற்பண்புகள், மனஉறுதி போன்றவைகளை தன்னுடையதாக உருவாக்கிக் கொண்டாள். மரியா தனக்கு ஏற்பட்ட கஷ்டங்களையும், துன்பங்களையும் "கடவுளின் பரிசு" என்று கூறிக்கொண்டாள். மரியாளின் மருத்துவர் "மரியாவின் இதயம் மிகவும் மோசமான நிலையில் பழுதாகியுள்ளது என்று கூறியும், அவள் அதைப்பற்றி எந்த கருத்தும் தெரிவிக்காமல் தான் எப்படியாவது கிறிஸ்தவர்களின் சகாய அன்னையின் பரிந்துரையால் குணமாவேன் என்ற ஆழ்ந்த நம்பிக்கையைப் பெற்றிருந்தாள்.

தன்னைக் காணவந்த தோழியிடம் "நான் தேவதாயின் உதவியால் குணமடைவேன், அன்னை என்னை கண்டிப்பாகக் குணப்படுத்துவாள்" என்று கூறினாள். சிறிது நாட்களுக்குப் பின், மரியா பள்ளிக்குச் சென்றபோது அவளிடம் நோய் இருந்த எந்த அறிகுறியும் இல்லாமல் முழுமையாகக் குணமடைந்தது அனைவருக்கும் ஆச்சரியமாக இருந்தது.

1985ல் டிசம்பர் 8ம் நாளன்று, "மரியாளின் புதல்விகள்" என்ற இயக்கத்தின் அங்கத்தினராகச் சேர்ந்தார். இது மரியா சகாய அன்னைமீது வைத்திருந்த ஆழ்ந்த பக்தியைக் காட்டியது. மரியாவின் ஆன்மீக குரு எமிலியோ போட்டாரி மரியாவின் தேவ அழைத்தலுக்கு மிகவும் உதவினார். மரியா 1920ல் தன்னுடைய 18வது வயதில் சகாய அன்னையின் புதல்வியர் இல்லத்தில் சேர்ந்துக்கொண்டார். தனது ஆன்மீக குருவின் வார்த்தைகளான "எப்படிப்பட்ட துன்ப நேரமானாலும், தான் சுக்கு நூறாக உடையும் நிலை ஏற்பட்டாலும் தன்னுடைய அழைத்தலில் உறுதியாகவும், உண்மையாகவும் இருக்க வேண்டும்" என்ற தாரக மந்திரத்தை மரியா தன்னுடைய இறுதிநாள்வரை தன்னுடைய துறவற வாழ்வில் நிலைத்திருக்க உதவியது.

1929ல் ஜனவரி 6ம் நாள் மரியா தன்னுடைய நித்திய வார்த்தைப்பாட்டினை ஏற்றாள். மரியா ஒவ்வொரு நாளும் இறைவனின் கையில் தன்னை ஒரு கருவியாக நினைத்து மகிழ்ச்சியோடு வாழ திட்டமிட்டார். புனித ஜான்போஸ்கோவின் முன்மாதிரியான ஆன்மீக வாழ்க்கைக் குறிப்புகள் மரியாவுக்கு உதவியாக இருந்தன. 1931ல் மரியா சான் ஜோஸ் என்னும் இடத்திற்கு அனுப்பப்பட்டாள். 1933ல் அங்கே இசை, வர்ணம் தீட்டுதல், தட்டெழுத்து போன்றவைகளைக் குழந்தைகளுக்குப் பயிற்றுவித்தாள். மரியா இளம் பிள்ளைகளின் உள்ளத்தைக் கவர்ந்ததனால், அவர்களுடைய ஆசிரியராகவும் நியமிக்கப்பட்டார்.

மறைக்கல்வி சொல்லித் தருவதல், வாழ்க்கை இழந்தவர்கள், புறக்கணிக்கப்பட்டோர்க்கு உதவுதல் போன்ற பணிகளைச் செய்யத் துவங்கினார். மேலும் வசதி உள்ளவர்கள் வசதி இல்லாதவர்களுக்கு உதவும் நல்ல மனப்பான்மையைத் தன்னுடைய சொல்லாற்றலினாள் உருவாக்கினாள். 1945ல் ஏழைக் குழந்தைகளுக்கான பள்ளியைத் துவங்கினாள். 1953ல் இறைவனின் உதவியால் மருத்துவமனை ஆரம்பிக்க நல்ல மருத்துவர்களின் மருத்துவ உதவியும், பண உதவியும் கிடைத்தது. கிராமங்களில் சரியான இல்ல வசதி இல்லாதவர்களுக்கு நல்ல வீடுகளை அமைத்துக் கொடுத்தார். பின் சிறிய நிலத்தை வாங்கி அதில் இல்லங்களை அமைத்து அதனருகே துறவற சபை உபதேசியர்கள், வாழ்க்கைக் கல்வி பயில்வோர் தங்குவதற்கு இல்லங்கள் அமைத்துக் கொடுத்தார்.

ஆங் சேன்ரோ சான் ஜோஸ்லில் மரியன்னைக்காக கட்டப்பட்ட தேவாலயம் இருந்தது. மரியா எப்பொழுதும் அந்த தேவாலயத்திற்குச் சென்று, திவ்விய நற்கருணை பக்தி வழியாகவும், மரியன்னைமீது தனக்குள்ள பக்தி வழியாகவும், தன்னுடைய சமூக பணிக்காக செபிப்பதில் ஈடுபட்டாள். மரியாவிடம் சமூக பணிக்கு குறைவான பணவசதி இருந்தாலும், இறைவனும், தேவ அன்னையும் தனக்கு எப்போதும் உதவுவார்கள் என்ற நம்பிக்கைக் கொண்டிருந்தாள். தன்னுடைய வயதான காலங்களில்





மற்ற எல்லா பணிகளிலிருந்தும் ஓய்வுபெற்றாலும், இளையோருக்கும், முதியோருக்கும் மறைக்கல்வி கற்றுத்தருவதில் ஓய்வு பெறவில்லை. 1977 ஜூலை 7ம் நாள் ஓய்வு பெற அனுப்பப்பட்ட லியோன் நிக்காராகோவிலில் மரியா இறைவனடி சேர்ந்தார். அப்போது அவருக்கு வயது 75. மரியாவின் உடல் சேன் ஜோஸ் கோஸ்டா ரிக்காவிற்கு சலேசியன் சிற்றாலயத்திற்கு அனுப்பப்பட்டு அவ்வாலயத்தில் புதைக்கப்பட்டார். இப்புனிதை தன்னுடைய வாழ்நாளெல்லாம் புனித சகாய அன்னையின் துணையோடு ஏழை எளிய மாணவிகளுக்கும், புறந்தள்ளப்பட்ட மக்கள், நோயாளிகள், வயதானவர்கள் என்று பலருக்கும் பல விதங்களில் பணியாற்றி நல்ல சமூகப்பணி திருத் தூதர் என்ற பெயரோடு மரித்தார்.

## திருச்சபைச் செய்திகள்

சகோ. சுரேஷ் இயேசுபாலன் ச.ச.,

### உதவி புரிய தயாராக இருப்பதே ஒரு சாட்சிய வாழ்வுதான்

பிறருக்கு உதவி புரிய எப்போதும் தயாராக இருப்பதே ஒரு சாட்சிய வாழ்வுதான் என்பதை எடுத்துரைத்த திருத்தந்தை, பணியாளர்களுக்கும் பயணிகளுக்கும் உரிய நேரத்தில் வழங்கப்படும் உதவிகள், அவர்கள் வாழ்வில் நீண்ட கால நல்லெண்ணத்தைக் கொடுக்கும் என்பதை, மனதில்கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

### திருஅவையின் தாய் அன்னை மரியா விழா

திருஅவையின் தாயாம் அன்னை மரியாவே இயேசுவின் அன்பில் நம்பிக்கைக் கொள்ளவும், அவரிடம் எம்மை முழுமையாக ஒப்படைக்கவும் எமக்கு உதவியருளும் என்ற கருத்தை வெளியிடும் டுவிட்டர் செய்தியை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிட்டார். மேலும் இவ்வாண்டு அக்டோபர் மாதம் சிறப்பிக்கப்படவிருக்கும் மறைப்பரப்புப் பணி நாளுக்குரிய செய்தியொன்றை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தூய ஆவியாரின் வருகைப் பெருவிழாவையொட்டி வெளியிட்டார். "ஆண், பெண் மறைப்பரப்புப் பணியாளர்களுக்கும், தங்கள் திருமுழுக்கு வழியாக திருஅவையின் மறைப்பரப்புப் பணியில் பங்குபெறும் அனைவருக்கும், என் இதயம் நிறைந்த ஆசீரை வழங்குகிறேன்" என்ற சொற்களைப் பதிவு செய்திருந்தார்.

### 2019ம் ஆண்டு மறைப்பரப்புப் பணி நாளுக்கு திருத்தந்தையின் செய்தி

இவ்வாண்டின் உலக மறைப்பரப்புப் பணி நாளுக்கென செய்தி வெளியிட்டுள்ள திருத்தந்தை, "Maximum Illud" என்ற ஏடு இயேசுவின் நற்செய்தியை எடுத்துரைப்பதில் ஒரு தூண்டுதலை வழங்குவதாகவும், திருஅவையின் இப்பணி குறித்த அர்ப்பணத்தைப் புதுப்பிப்பதாகவும் அமைந்துள்ளது என்று தன் செய்தியில் கூறியுள்ளார். தெய்வீக வாழ்வு என்பது, விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள ஒரு பொருள் அன்று.

மாறாக, மற்றவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஒரு புதையல் என்று எழுதியுள்ளார். இலவசமாகப் பெற்ற இறைவார்த்தை என்ற கொடையை, நாம் இலவசமாகவே வழங்கக் கடமைப்பட்டுள்ளோம். இதில் ஒதுக்கி வைக்கப்படுபவர்கள் என்று எவரும் இல்லை என்று கூறும் திருத்தந்தை, திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவரும் மறைப்பரப்புப் பணியாளர்களே என்பதை தன் செய்தியில் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

**இணக்கத்தைக் கொணர்வது இறைவனின் அமைதி**

பெந்தகோஸ்து திருவிழாவையொட்டி, வத்திக்கான் புனித பேதுரு பசிலிக்காப் பேராலய வளாகத்தில் குழுமியிருந்த பல்லாயிரக்கணக்கான திருப்பயணிகளுக்குத் திருப்பலி நிறைவேற்றி மறையுரை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இயேசுவின் மரணத்திற்குப்பின் தங்கள் உயிர் குறித்து கவலைப்பட்டுக் கொண்டிருந்த சீடர்கள், தூய ஆவியாரின் வருகைக்குப்பின் தங்கள் உயிரையும் கையளிக்கத் தயங்காத துணிவு பெற்றதைக் காண்கிறோம் என்றார். அச்சத்தில் வாழ்ந்த சீடர்கள் தூய ஆவியாரின் வருகைக்குப்பின் தங்களுள் இளம் இரத்தம் பாய்ச்சப்பட்டவர்களாக உணர்ந்தனர். அதே தூய ஆவியானவர்தாம் இப்போதும் நம் வாழ்வில் மாற்றங்களைக் கொணர்கிறார் என்றார் திருத்தந்தை பிரான்சிஸ்.

**புனித பூமியில் அமைதி நிலவ செபம்**

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனத் தலைவர்களுக்கு இடையே 2014ம் ஆண்டு ஜூன் 8ம் தேதி வத்திக்கானில் வரலாற்று சிறப்புமிக்க சந்திப்பு இடம் பெற்றதன் ஐந்தாம் ஆண்டை நினைவுகூரும் முறையில் ஜூன் 8 சனிக்கிழமை பகல் ஒரு மணிக்கு "அமைதிக்காக ஒரு நிமிடம்" செபம் கடைப்பிடிக்கப்பட்டது. மேலும் இந்நிகழ்வை முன்னிட்டு, தன் டுவிட்டர் செய்தியிலும், ஆண்டவரே, எம் நாவுகள் மற்றும் கரங்களிலிருந்து வன்முறையை அகற்றியருளும், எம்மை எப்போதும் ஒன்றிணைக்கும் "உடன்பிறப்பு" என்ற சொல் உறுதுணையாக இருக்கவும், எம் வாழ்வு எப்போதும் அமைதியின் பாதையாக இருக்கவும், எம் இதயங்களையும் மனங்களையும் புதுப்பித்தருளும், என்ற சொற்களை இச்சனிக்கிழமையன்று எழுதியுள்ளார்.

**வேதியர்களுக்குப் பயிற்சி, சிறப்பு மறைப்பரப்பு மாதம்**

வருகிற அக்டோபர் மாதம் சிறப்பு மறைப்பரப்பு மாதமாகச் சிறப்பிக்கப்படுவது, மறைப்பணித்தளங்களில் வேதியர்களுக்குப் பயிற்சியளிப்பது, செபங்களின் புதிய முறைகளைப் புரிந்துகொள்ளுதல், மறைப்பணியை வழிநடத்துதல், மறைப்பணிக்கு நிதி சேர்த்தல் போன்ற தலைப்புகளில், பாப்பிறை மறைப்பணிக் கழகங்களின் பொது அமர்வில் கர்தினால் பெர்னாண்டோ பிலோனி அவர்கள் உரையாற்றினார்.





## சுடர் வாசகர் போட்டி - 60 சரியான விடைகள்

1. அச்சுத் துறையில்
2. அலெக்சாந்திரியா நகர் புனித சிரில்
3. விசிடேஷன் சபை துறவி
4. புனித ஜோசப் கஃபாசோ
5. அகமது அல் தாயிப்
6. மனிதராய் பிறந்தவர்களுள் பெரியவர்
7. திருப்பாடல் 121 : 7-8
8. புனித பர்னபா
9. புனித ஜஸ்டின்
10. தூய ஆவியாரின் ஏவுதலால்
11. புனித ஜோசப் கஃபாசோ
12. சால்வியன்
13. பதுவை அந்தோணியார்
14. புனித பவுல்
15. 1953, ஜூன் 8

**குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்கள்**

Mrs. Pauline Susainathan, Madurantakam

Mr. Andrew, Chennai

Sr. Celine, Madurai

## சுடர் வாசகர் போட்டி - 61

1. வேதியர்களுக்கு பயிற்சி அளிப்பது பற்றி கர்தினால் பெர்னான்டோ எந்த அமர்வில் பேசினார்?
2. இனிகோவின் இயற்பெயர் என்ன?
3. பெரிய யாக்கோபுவை திருஅவை எப்படி அழைக்கின்றது?
4. கர்தினாலுக்குரிய தொப்பியை "மரத்தில் தொங்கவிட்டு செல்லுங்கள்" என்று கூறியவர் யார்?
5. ஐரோப்பாவின் பாதுகாவலர் தந்தை யார்?
6. மரிய மெனேஸஸின் பெற்றோர் பெயர் என்ன?
7. "இதுபாவம் இதனால் நீ நரகத்திற்கு போவாய்" கூறியது யார்?
8. "அவரோடு செல்வோம் அவரோடு மரிப்போம்" கூறியது யார்?
9. இப்பொழுது நம் வாழ்வில் மாற்றங்களை கொணர்பவர் என்று திருத்தந்தை யாரைக் குறிப்பிடுகிறார்?
10. அன்னை மரியா எந்த வயதில் ஆலயத்தில் அர்ப்பணிக்கப்பட்டார்?
11. தந்தை சைமனிடம் கார்மேல் அன்னை காட்சியில் கூறியது என்ன?
12. ஊனமுற்ற காலுடன் இறைப்பணி ஆற்றிய அரசர் யார்?
13. மத்திய அமெரிக்காவில் முதன் முதலில் அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்டவர் யார்?
14. தன் உடலில் உள்ள தழும்புகள் எதற்கு அடையாளம் என்று பவுல் கூறுகிறார்?
15. புனித தோமா வழியாக திருமுழுக்கு பெற்றவர்கள் எப்படி அழைக்கப்பட்டனர்?

**அன்பு நிறை வாசகர்களே!**

இந்த மாத "சுடர் வாசகர் போட்டி" பதில்களை ஜூலை 20ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று பங்கேற்பாளர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும்.

(சரியான முகவரியைக் குறிப்பிடவும்)





## அடுத்த சுடரில்

### பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

அருளாளர் அகஸ்துஸ் சர்தோரிஸ்கி
பொதுக்காலம் 18ம் ஞாயிறு
பனிமய மாதா - புனித மரியாவின் பெருங்கோவில் நேர்ந்தளிப்பு
ஆண்டவருடைய தோற்ற மாற்றம்
புனித தோமினிக்
புனித லாரன்ஸ்
பொதுக்காலம் 19ம் ஞாயிறு
புனித கன்னி மரியாவின் விண்ணேற்பு பெருவிழா
பொதுக்காலம் 20ம் ஞாயிறு
அரசியான கன்னி மரியா
புனித பர்த்தலமேயு
பொதுக்காலம் 21ம் ஞாயிறு
அருளாளர் மரிய ட்ரொங்காத்தி
அருளாளர் செப்ரீனா நமுங்குரா
புனித மோனிக்கா
புனித அகுஸ்தின் மறைவல்லுநர்

### பகுதி 2: விசுவாசத்தில் வளர...

விண்ணுக்கும் மண்ணுக்கும் அரசியே வாழி
திருஅவையின் இறைவல்லுநர் புனித அகுஸ்தின்
அருளாளர் நமுங்கரா வாழ்வு - தரும் பாடம்
திருச்சபைச் செய்திகள்

**தீபகச் சுடர்**

அன்பு வாசகர்களே!

மாதம் தவறாமல் ஒரு பிரதியைப்பெற ஆண்டு சந்தா ரூ. 100/ செலுத்தி உங்கள் பெயரைப் பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

**தீபகம்**
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை-600 010.
தொலைப்பேசி: 044-26428162.

பெயர்:....................................
முகவரி:..................................
..........................................
..........................................
..........................................

## ஜூலை மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | தி | ஜூனிபெரோ செர்ரா | தொநூ 18: 16-33 | மத் 8: 18-22 |
| 2 | செ | புனித புரோசெஸ்சஸ் மார்ட்டினியன் | தொநூ 19: 15-29 | மத் 8: 23-27 |
| 3 | பு | **புனித தோமா: இந்தியாவின் திருத்தூதர்** | எபே 2: 19-22 | யோவா 20: 24-29 |
| 4 | வி | போர்த்துக்கல் நாட்டு புனித எலிசபெத் | தொநூ 22: 1-19 | மத் 9: 1-8 |
| 5 | வெ | புனித அந்தோணி மரிய சக்கரியா | தொநூ 23: 1-4.19;24:1-8,62-67 | மத் 9: 9-13 |
| 6 | ச | புனித மரிய கொரற்றி | தொநூ 27: 1-5, 15-29 | மத் 9: 14-17 |
| 7 | ஞா | **பொதுக்காலம் 14ம் ஞாயிறு** | I. எசா 66: 10-14<br>II. கலா 6: 14-18 | லூக் 10: 1-12,17-20 |
| 8 | தி | புனித ஹெஸ்பேரியஸ் / ஸோ | தொநூ 28: 10-22 | மத் 9: 18-26 |
| 9 | செ | புனித அகுஸ்தின் சவோ ரோங் | தொநூ 32: 22-32 | மத் 9: 32-38 |
| 10 | பு | ஏழு சகோதர வேத சாட்சிகளும், அவர்களது தாய் பெலிசிட்டியும் | தொநூ 41: 55-57;42:5-7,17-24 | மத் 10: 1-7 |
| 11 | வி | புனித பெனடிக்ட் | தொநூ 44: 18-21,23-29;45:1-5 | மத் 10:7-15 |
| 12 | வெ | புனித ஜான் கில்பெர்ட் | தொநூ 46: 1-7,28-30 | மத் 10: 16-23 |
| 13 | ச | புனித ஹென்றி | தொநூ 49: 29-32;50:15-26 | மத் 10: 24-33 |
| 14 | ஞா | **பொதுக்காலம் 15ம் ஞாயிறு** | I. இச 30: 10-14<br>II. கொலோ 1: 15-20 | லூக் 10: 25-37 |
| 15 | தி | புனித பொனவெந்தூர் | விப 1: 8-14.22 | மத் 10: 34-11:1 |
| 16 | செ | கார்மேல் மலை புனித கன்னி மரியா | விப 2: 1-15 | மத் 12: 46-50 |
| 17 | பு | புனித அலெக்சிஸ் | விப 3: 1-6.9-12 | மத் 11: 25-27 |
| 18 | வி | புனித பிரெட்ரிக் | விப 3: 13-20 | மத் 11: 28-30 |
| 19 | வெ | புனித ஜிஸ்தா-ரூபினா | விப 11: 10-12:14 | மத் 12: 1-8 |
| 20 | ச | புனித அப்போலினாரீஸ் | விப 12: 37-42 | மத் 12: 14-21 |
| 21 | ஞா | **பொதுக்காலம் 16ம் ஞாயிறு** | I. தொநூ 18: 1-10<br>II.கொலோ 1: 24-28 | லூக் 10: 38-42 |
| 22 | தி | புனித மகதலா மரியா | இபா 3: 1-4 | யோவா 20: 1,11-18 |
| 23 | செ | புனித பிரிட்ஜிட் | விப 14: 21, 15:1 | மத் 12: 46-50 |
| 24 | பு | புனித ஷார்பெல் மாக்லூப் | விப 16: 1-5.9-15 | மத் 13: 1-9 |
| 25 | வி | புனித யாக்கோபு, திருத்தூதர் | 2கொரி 4: 7-15 | மத் 20: 20-28 |
| 26 | வெ | புனிதர்கள் சுவக்கின், அன்னா | விப 20: 1-17 | மத் 13: 18-23 |
| 27 | ச | புனித இன்னசென்ட் | விப 24: 3-8 | மத் 13: 24-30 |
| 28 | ஞா | **பொதுக்காலம் 17ம் ஞாயிறு** | I. தொநூ 18: 20-32<br>II. கொலோ 2: 12-14 | லூக் 11: 1-13 |
| 29 | தி | புனித மார்த்தா | விப 32: 15-24, 30,34 | யோவா 11: 19-27 |
| 30 | செ | புனித கிரிசோலொகு இராயப்பர் | விப 33: 7-11, 34: 5-9,28 | மத் 13: 36-43 |
| 31 | பு | புனித லொயோலா இஞ்ஞாசியார் | விப 34: 29-35 | மத் 13: 44-46 |